முரசொலி

ஆசிரியர்

வார இதழ் — மு. கருணாநிதி

காசு 2 | 30—3—56 | வெள்ளி | ஒலி 52

குறளோவியம்

திருக்குறளாம் தேனமிழ்தம் வழங்கிய திருவள்ளுவர் ஒரு நாள் காட்டகத்துக் காட்சிகளை சுவைத்து வரப் புறப்பட்டார்.

தென்னவரின் தோள் போன்ற குன்றுகளும், தமிழ் மன்னவரின் குடைபோன்ற பெருந் தருக்களும் வளங்காட்டி வள்ளுவரை ஈர்த்தன. மான் கூட்டம்-புலி நடமாட்டம் அத்தனையும் கண்டார்.

தொலைவினிலே...குன்றிரண்டு உயிர்பெற்றெழுந்து நின்று உயிர் குடிக்கப் போராடும் நிகழ்ச்சிதனை உண்டார் விழியினாலே !

இரு-யானை இறப்புலகின் அழைப்புக்கு யார் பொருத்தம் எனபதற்குப் போட்டி வைத்துப் போராடும் தீ நிலையைத் தென் தலைவர் வியந்து நோக்கும் வேளையிலே - திருக்குறள் தனிலே புதுக் குறள் இணைக்க பொன்னான வாய்ப் பொன்றை ஓர் மனிதன் தந்திட்டான்,

யானைப் போரை-குன்றின் மீது இருந்தொருவன் கண்டதை இவர் கண்டார், அண்மையில் நெருங்க வொண்ணாப் பெரும்போர்! அதைக் குன்றின் மீது இருந்து காண்பவன் அதிர்ச்சி அடைய வில்லை. காரணம்; யானைகளுக்கு எட்டாத உச்சியிலே இருக்கிறான். அதனால் அச்சம் எழ நியாய மிலலை! குன்றின் மீது நின்றவனை வள்ளுவர் அழைத்து வந்தார்—எங்கே ? குறள் கோட்டைக் குள்ளே ! பொருட்பால் எனும் பொழிலுக்குள்ளே !

குன்றின் மீது நின்று பயங்கர மான யானைச் சண்டையை காண்பவனுக்கு அச்சம் பிறப்ப தில்லை. பொருளீட்டும் செயலில் ஈடுபட்டவனுக்கும் அச்சம், வருத்தம் எதுவும் ஏற்படுவதில்லை. குன்றேறி யானைப்போர் காண்பவனும் பொருளுடையவனும் ஒரே நிலையில் உள்ளவர்கள்.

வள்ளுவர் காட்டிலிருந்து திரும்பினார், ஏட்டிலே குறளோ வியம் தீட்டினார்.

இதோ அது;

" குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத் தொன் றுண்டாகச் செய்வான் வினை "

(கைத்து உண்டாக — பொருள் உடையவனாக)

கருணா.



பதஞ்சலியார் பணி ! - - [தலையங்கம்]

"[illegible]"

செய்தித்தாள், நூல், தாம்பூல விற்பனை

சு. வே. தங்கசாமி,

ஆரிய ஏட்டின் இழிசெயல்!

அன்புள்ள குமார்,

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நீ எழுதிய கடிதம் கிடைத்தது. சென்ற கிழமை வெளிவந்த சு.மி. ஏட்டின் இழிசெயல் குறித்தும்; தமிழர்களின் சுயமரியாதைக்கு அந்த ஆரிய ஏடு நேரடியாகவே கணை தொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தாய்: உன் எழுத்துக்களில் அந்த ஏட்டின் கீழ்த்தர செயல் குறித்து நீ கொதிப்படைந்திருக்கிருய் என்பதை புரிந்து கொண்டேன்; கட்டுண்டோம்— பொறுத்திருப்போம்; காலம் மாறத்தானே வேண்டும்!

மக்கள் மன்றத்திலே மாற்றுக் கட்சிகள் நாளுக்குநாள் செல்வாக்கு பெற்று வருவதும்; நாட்டின் சிறுமை கண்டு சீறி—பெருமைக்கு வழிகோலும் தாயகத்தின் விடுதலைப் படையின் முன்ஞேடிகளாம் நம் வளர்ச்சியும்; அந்த ஏட்டின் வயிற்றெரிச்சலை தூண்டி விட்டிருக்கிறது — பாவம், சாக்கடையில் புரண்டபடியே கூக்குரல் எழுப்புகிறது; 'கோயபல்ஸ்'கடை பிடித்த கோணல் வழிகளில் நடை பழகி, ஏடுகளுக்கு இருக்கவேண்டிய 'கண்ணியத்தை' காலடியிலே போட்டு மிதிக்கிறது அந்த அம்மாமி ஏடு!

ஏகாதிபத்திய வெறிபிடித்த முரட்டு மனிதர்களுக்கு எதிராக உறுவாகி இருக்கும் கூட்டணியின கௌரவத்திற்கு இழுக்கு தரும் விதத்திலே அந்த ஏடு சென்ற கிழமை ஒரு சித்திரம் வரைந்து, கூட்டணியின் எதிர் காலத்தைக் குறித்து ஆருடம் கணித்திருக்கிறது. அந்தஆருடம் கணித்ததே தவறு என்று கூற வில்லை நான்—அதற்கு உரிமை உண்டு. மேலும் ஆருடம் கணித்தே இந்த சமுதாயத்தை ஏமாற்றி வயிறு வளர்க்கும் ஆரிய ஏடல்லவா? ஆருடம் கணிக்கட்டும்; வேண்டுமென்ருல் சர்வ கட்சியின் 'பலன்'களைக் குறித்து ஒரு பஞ்சாங்கம் போடட்டும். அதைப்பற்றி நாடோ, நாமோ கவலைப்பட்டுக் கொண்டிருக்க நேரமில்லை.

இலட்சிய முகடு நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் நம்மையும், நம்மோடு இணைந்திருக்கும் சர்வகட்சியின் சக்தியையும் புரிந்துகொள்ளாத காமராசர், சென்ற சில தினங்களுக்கு முன்பு லயோலா கல்லூரியிலே பேசுவதற்கு இடங்கிடைத்தபோது (வாழ்நாளிலே அவர் செய்த பாக்கியம் தான்!) அறிவுக் கோயிலுடன் தொடர்பில்லாத அவர், அங்கு உதிர்த்த வீண் வார்த்தைகளுக்கும், அடுத்து சென்னை புரசைவாக்கத்திலே அவர் எழுப்பிய கூக்குரலுக்கும், சித்திர வடிவம் தந்திருக்கிறதாம் மித்திரன்'

குமார், இரக்கமற்ற இழிசெயலுக்கும் ஒரு எல்லை உண்டு. சாக்கடை சேற்றை வாரி முகத்திலே பூசிக்கொள்பவன், தெருப் புழுதியிலே புரண்டுகிடக்கும் பைத்தியக்காரன்தான் என்ருலும் அவனும் மனித இனமாயிற்றே என்ற இரக்கம், இதயம் உள்ளோருக்கெல்லாம் எழத்தானே செய்யும்?

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக தேய்ந்து தேய்ந்து தேடுவாரற்று, மரண மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அந்த ஏடு, கூவத்திலே முழுக்கு போட்டு விட்டு, அந்த வாடை உடலை விட்டு நீங்குவதற்கு முன்னுல். ஏடும் எழுதுகோலும் தூக்கி சித்திரம் தீட்டி, வீரங்கொள் தமிழரின் கூரிய வாள் முனைக்கு நேராக அழுக்கேறிய பூணூலை உயர்த்திப் பிடித்திருக்கிறது.

ஆம்குமார்; கூட்டணியின் தலைமையிலே திரண்ட லட்சக் கணக்கான கொள்கை சீயங்களின் வீரத்திற்கும் பொறுமைக்கும் அந்த ஆரியஏடு சவால்விட்டிருக்கிறது.

தென்னகத்தில் திரண்டிருக்கும் கூட்டணியின் சக்தி, ஆரியம் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு வலிமை வாய்ந்தது, கூட்டணியில் இணைந்திருக்கும் அரசியல் தலைவர்கள், காமராசரை விட; அய்யர் வட்டாரத்து பெரிய புள்ளிகளை விட அறிவுடையவர்கள், அதனினும் கண்ணியத்தைக் கடைபிடிக்கவேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள், 'அவாள்' வட்டாரம் அறியாததல்ல இது; அன்று கடற்கரை நோக்கி பரணி பாடி சென்ற பட்டாளம் நினைத்திருந்தால்; அந்தப் படை வரிசையின் பாதச் சுவடுகள் எழுப்பிய புழுதியோடு, புழுதியாக கலந்து போயிருக்கும் ஏகாதிபத்தியமும், அதற்கு பல்லிளித்து வாழும் ஆரிய ஏடுகளும், கூட்டணியின் தலைவர்களாம் குணக்குன்றன்ன மாவீரர்கள், கடமை, கண்யம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தால்; குகை விட்டுக் கிளம்பிய புலிகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தனர், கண்யம் காத்தனர்.

அத்தகைய மரியாதைக் குரியவர்களைத்தான் நாட்டு மக்களின் புகழ் மாலைக்குப் பாத்திரமான கூட்டணியைத்தான், ஆரிய வார ஏடாம் சு. மி. கழுதையாக, நாயாக, குள்ள நரியாக ஆடாக சித்தரித்திருக்கிறது. குமார். நரகலைக் கையிலே எடுத்து நல்லோர் மேல் வீச முயலும் இந்த ஆரிய ஏட்டின், அதற்கு ஆலவட்டம் வீசும் அக்ரகாரத்தின் மூதாதையரின் குலை நடுக்கும் கூற்றமென வாழ்ந்த நம் முன்னோர்களையும் நினைவு படுத்தி இருந்தாய், நான் எடுத்தெழுத முடியாத அளவிற்கு நெருப்பு வார்த்தைகளை நடமாட விட்டிருந்தாய் உன் கடிதத்தில்.

கூட்டணி, பத்திரிகை கண்ணியத்தை சோரம் போக விட்ட அந்த ஆரிய ஏட்டின் குழிவிழுந்த கண்களுக்கு—அரசியல் நாகரீகத்தை வெட்கமின்றி ஏலம் கூறும் அந்த இழிதகை ஏட்டின் ஓநாய் பார்வைக்கு கழுதையாக, நாயாக, குள்ள நரியாக ஆடாக தோற்றமளிக்கிறது.

கூட்டணி தமிழகத்தின் ஒன்றுபட்ட சக்தி;அந்த சக்தியைஇகழ்ந்திருக்கிறது அந்த ஆரிய ஏடு!

கூட்டணி அதிக நாள் நிலைக்காது, இப்படி சொன்னூராம்; மழைக்காகவும் அறிவுக் கோயிலில் ஒதுங்காத காமராசர். அதற்கு இப்படியொரு சித்திரத்தைத் தீட்டி, தமிழர்களின் ஆத்திரத்தைக் கிளப்பி இருக்கிறது. அறிவின் சிகரங்களாம் கூட்டணித் தலைவர்களை ஏடு தூக்கி

களுக்கு இருக்க வேண்டிய 'கற்பை' விலை கூறும் அந்த ஆரிய ஏடு கேவலமான முறையிலே சித்தரித்து, தன் சிறுமதியை வெளியிட்டு, தன் வாழ்வு அஸ்தமிப்பதற்கு அதிக நாள் இல்லை என்பதை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது.

தமிழர்களின் கையை எதிர்பார்க்கும் அந்த ஆரிய ஏடு, தமிழர்களை இகழ்ந்திருக்கிறது !

தமிழர்களின் அணைப்பிலே வயிறு வளர்க்க வேண்டிய அந்த 'அம்மாமி' இதழ் தமிழர் தலைவர்களை கேலி செய்கிறது.

இந்த ஆரிய ஏடு மாற்றுக் கட்சியினரைப் பற்றி எத்தகைய அறுவருப்பையும்—விஷ நினைப்பையும், தன் பாழ் நெஞ்சத்திலே தேக்கி வைத்திருக்கிறது என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும் !

குமார், கருத்து வேறுபாடு கொண்ட அரசியல் தலைவர்களை, கண்டிப்பதற்கு கண்ணியம் மறந்த அந்த ஏடு, எவ்வளவு அற்பத்தனமாக நடந்து கொண்டிருக்கிறது, என்பதைக் கண்டு நாடு விழிகளைச் சிவப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

ரத்தத் தடாகத்திலே நீந்தித்தான் 'விடுதலைத் தாமரையை'ப் பெற முடியும் என்ருலும்,

நரம்புகளைக் கயிராக்கித்தான் 'லட்சிய முகட்டை' எட்டிப்பிடிக்க இயலும் என்ற நிலை வந்தாலும்,

சதைகளை அறுத்துக் கொடுத்து இதயத்தைக் கிழித்து, அதிலிருந்து பொங்கி வரும் குருதியை, ஏகாதிபத்திய வெறியர்களின் பாதங்களுக்கு செம்பஞ்சுக் குழாம்பாக்கிப் பூச வேண்டும் என்ற பயங்கர நிலை ஏற்பட்டாலும்.

''உயிர், எனக்கு வெல்லமல்ல; உரைகாண என் வாளுக்கும் ஓய்வில்லை'' — என்று சங்கநாதம் எழுப்பிடும், சிங்கார அணிவகுப்பு தமிழர்தம் பெரும்படை!

அந்தப் படை நடைபோடும் பாதையிலே, குத்தீட்டிகளை சொருகிவிட்டு, புதரடியிலே ஒளிந்திருந்து பார்க்கும் குள்ளநரி செயல் செய்கிறது-ஆரிய ஏடான சுதேசமித்திரன்!

கருத்துப் புரட்சி வளர்ந்திருக்கும் காலம் இது; என்ருலும் அந்த ஆரிய ஏடு காட்டுமிராண்டி முறையைப் பின்பற்றுகிறது!

செல்வாக்குமிக்க சர்வகட்சியும் மக்கள் இதயங்களிலே இடம் பெற்றுவிட்ட, அதன் தலைவர்களும் ஆரிய ஏடொன்ருல் ஆபாசமான முறையிலே நையாண்டி செய்யப்படுகிருர்கள்!

''தமிழர்களின் வீரத்தின்மேல் வீசினுன் ஒரு சொல்; அதோ அந்த ஆரியன் சுமக்கிருன் பார் கல்!'' என்ற சிம்மக் குரல், சரித்திரத்தின் உச்சியிலே இருந்து கேட்கிறது!

செங்குட்டுவன் துடிக்கிருன்— செங்குருதி கொதிக்கிறது! பூமிக்கடியிலே புதைந்து கொண்டிருக்கும் சக்திதான் ஒருநாள் புகை கக்கும் எரிமலையாக வெடித்துச் சிதறுகிறது.

மக்களின் நெஞ்சங்களிலே புழுங்கிக்கொண்டிருக்கும் சக்தியும் ஒருநாள் 'முடிவு' காணும் போர் முழக்கமாக உருவெடுக்கும்!

அந்த பயங்கர வெள்ளத்தின் காட்டாற்று வேகத்திலே; ஏகாதிபத்திய நோக்கோடு, பொய்க்கும் போலிச் செய்திக்கும் பராக்குக் கூறி, உரிமை கேட்போரை ஒதுக்கிவிட்டு, சாக்கடை வாடையிலே சந்தண மணம் வீசுதுபார் —என்று கூறும் உணர்ச்சியற்ற நாசியோடு, கோணல் நடையிலே 'கோயபல்ஸ்' மிடுக்கோடு சென்று கொண்டிருக்கும் சு. மி. போன்ற ஏடுகள்—எச்சில் இலைகளாக மிதந்துவிடும் என்பதையும் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிரும்; அனுதாபத்தோடு!

அன்புள்ள,
பொன்முடி

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 30--3--56 வெள்ளி

பதஞ்சலியார் பணி

உலகம் அறிவுப் பாதையிலே நடை போட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வழக்கம் போலவே 'பார்ப்பனீய ரட்சகர்கள்' என்று தம்மைப் பாவித்துக் கொள்ளும் கனபாடிகள் சிலர் பழமைக் குப்பைகளைக் கிளற ஆரம்பித்திருக்கின்றனர்.

அணுவைப் பிளந்து அதை சாந்தி வழிகளில் எப்படிப் பயன்படுத்துவது—

மேக மண்டலத்தில் செயற்கை கிரகம் ஒன்றை சுற்ற வைத்து வான்நிலை ஆராய்ச்சியை எப்படி ஒருபடி உயர்த்துவது—

என்றெல்லாம் மனித ஜாதியை மகோன்னத சிந்தனையின் கருவூலமாக்கிக் கொண்டு, 'கர்த்தரின் படைப்பு' எனக் கருதப்படும் உலகத்தில் களிப்பையும், அமைதியையும் நாட்டுவதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலேதான் குழிப்பிணத்தைத் தோண்டி வைத்துக் கொண்டு, அதற்காக விழி நீரை வீணாக்கும் வேலையைச் செய்வதற்கு ஆரிய தர்மக் காவலர்கள் சிலர் புறப்பட்டிருக்கின்றனர்.

வேலூர் கோட்டையிலே ஆண்டவன் ரூபமில்லாது விளங்கும் கோவிலில் தெய்வச் சிலை யொன்றை 'பிரதிஷ்டை' செய்து, அதற்கான ஆராதனைகள் தினந்தோறும் நடந்து வர ஆவன செய்ய வேண்டுமோம்.

—சாதாரண உஞ்சிவிருந்திப் பார்ப்பனரல்ல; சுப்ரீம் கோர்ட்டின் மாஜி நீதிபதியான பதஞ்சலி சாஸ்திரியாரின் தலைமையிலேதான் இந்தத் திவ்யமான யோசனை உருவாகி யிருக்கிறது!

பாகிஸ்தான் தனக்கென ஒரு அரசியல் அமைப்பை வகுத்துக் கொண்டு குடியரசாய் உருவமெடுத்திருக்கிறது; அந்த அரசியல் அமைப்பு இத்தன்மையது; இந்திய அரசியல் சட்டத்திலிருந்து இவ்வகையில் மாறுபட்டது—

என்றெல்லாம் விளக்கம் தர வேண்டிய சட்டத்தின் சந்து பொந்துகள் தெரிந்த அறிஞர், வௌவால் புகுந்திருக்கும் ஆலயத்தைப் பழுதுபார்க்க வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பி யிருக்கிறார்!

வேலூரிலே இரு அதிசயங்கள் உண்டாம்; சாமியில்லாத கோயில்; அடுத்தது தண்ணீரில்லாத ஆறு—இதுவும் பதஞ்சலியார் வாசகம்தான்!

"மந்திரிகளில் ஒருவர் இந்த ஜில்லாவிலிருந்து சென்றிருப்பவர். எனவே அவர் தனனுடைய சகாக்களிடம் முயன்று வேலூர் மக்களின் ஆசையை நிறைவேற்றி வைப்பார் என நம்புகிறேன்"

—இப்படியும் சாஸ்திரியார் 'ஆஸ்திகக் கோடி'களின் சார்பாக சங்கநாதம் கிளப்பியிருக்கிறார்!

இரு அதிசியங்கள், வேலூரிலே!
சாமியில்லாத கோயில்; நீரில்லாத ஆறு!

பதஞ்சலியாருக்கு இந்த மண்ணின்மீது பற்றிருக்குமானால்—

வட ஆற்காடு மாவட்டத்தின் முன்னேற்றத்திலே உண்மையான கருத்து இருக்குமானால் நீரில்லாத ஆறு அந்த மாவட்டத்தின் குறுக்கே ஓடிக்கொண்டிருப்பதை மாற்றுவதற்கு முயற்சித்திருக்கலாம்!

பாலாற்றிலே தண்ணீர் விடுவதற்காக பல ஆண்டுகள் மைசூரோடு போராடிக்கொண்டிருப்பதாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களே! ஆண்டுகள் பல உருண்டோடி விட்டனவே; நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள்? எங்கே உங்கள் அரசியல் சாதுரியம்?—

என்று அவர் குரல் கொடுத்திருப்பாரேயானால், பதஞ்சலியார் பொதுமக்களின் பிரியத்துக்குப் பாத்திரமாகி யிருக்கலாம்!

அந்த மாவட்டத்திலிருந்து சென்றிருக்கும் அமைச்சரைப் பார்த்து, கோவிலில் கடவுள் குடியிருக்க வழி செய்யுங்கள் — என்று கேட்பதற்குப் பதிலாக, பாலாற்றில் தண்ணீர் வருவது என்ன ஆயிற்று?—என்று ஒரு வார்த்தை உதிர்த்திருப்பாரேயானால்,

அது குறித்து முடிவெடுக்க கோவில் புனருத்தாரணக் கமிட்டிக்குப் பதில், 'வடாற்காடு மாவட்டத்தின் வளம் காக்கும் கமிட்டி' யொன்றை நிறுவியிருப்பாரேயானால், பதஞ்சலியார் பெற்ற பட்டத்திற்கும், அவர் உட்கார்ந்திருந்த நீதிபதி ஆசனத்திற்கும் உரியதொன்றைச் செய்தவராகி யிருப்பார்!

ஆனால் அவரோ, வேலூர் கோட்டைக் கோவிலுள்ளே குடியிருக்கும் வௌவாலின்பால் கோபம் கொண்டு, அவற்றின் வாழ்வுக்கு வேட்டு வைக்கும் முயற்சியிலே இறங்கியுள்ளார்!

வெட்கம் பெருக்கெடுக்கிறது; வேதனை நம் விலாப்புறத்தைத் தாக்குகிறது—பட்டம் பெற்றோர், பெரும் பதவி வகித்தோர், சவுண்டிகளும் சங்கராச்சாரியார்களும் செய்யவேண்டிய வேலைகளை மேற்கொள்ளும்போது!

வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத வேடிக்கை இந்தக் கேடு கெட்ட நாட்டிலே கண்கூடாக நடைபெறுவதைப் பார்க்கிறோம்!

அமெரிக்காவின் பெடரல் கோர்ட்டைச் சேர்ந்த நீதிபதிகள், பதவிக் காலம் முடிவடைந்த பிறகு பாழடைந்த மாதாகோயில்களைப் பழுதுபார்க்கும் பணியிலே ஈடுபடுவது கிடையாது—

'இங்கிலாந்து பிரீவி கவுன்சி'லில் அங்கம் வகித்தோர், 'ஆங்லிகன்' சர்ச்சைச் சேர்ந்த ஒடிந்துபோன சிலுவையைச் செப்பனிடுவதற்காக ஒரு கமிட்டியை அமைத்தது இல்லை—

—அப்படி ஏதாவது ஏற்பட்டாலும் அதைக் கவனித்துக் கொள்ள மடாலயங்கள் இருக்கின்றன என்று விட்டுவிடுவார்!

—இங்குதான் பார்க்கிறோம் சுப்ரீம் கோர்ட்டின் மாஜி நீதிபதி கனபாடிகள் செய்யவேண்டிய பணியிலே தன் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்!

ஜலகண்டேஸ்வரனாம்!—அந்த கோவிலிலே இருநூறு வருஷங்களுக்குமுன்பு குடியிருந்த சுவாமியின் பெயராம்! ஏன் அந்தப் பெயர் வந்ததெனில், அந்த லிங்கத்தைச் சுற்றி எப்போதும் 'ஜலம்' இருந்தபடி இருக்குமாம்!

-இந்தச் செய்தியையும் பதஞ்சலியார்தான் வெளியிட்டிருக்கிறார்!

தண்ணீரில அமிழ்ந்திருக்கும் லிங்கத்தின் புனருத்தாரணத்துக்காக இன்று புண்ய சீலர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்!

அன்று தென்னகத்தின் மூலையிலே புயலும், வெள்ளமும் தங்கள் அழிவு வேலையைச் செய்தபோது உயிரும் உடலும் கொண்ட ஆயிரமாயிரம் மனித ஜந்துக்கள் கழுத்தளவு தண்ணீரிலே மிதந்தார்கள்; கொந்தளித்துக் கிளம்பிய கடல் நீரிலே கால் நடைகளைப் பறிகொடுத்து விட்டு, பிணங்களாய் மாறினார்கள்!

இன்று கல்லால் அடித்த லிங்கத்திற்கு புனருத்தாரணம் நடத்தப் போகும் பதஞ்சலியார் கூட்டம் அன்று ஆயிரமாயிரவர் 'ஜலகண்டேஸ்வரர்களாய்' மாறி, வீடு வாசல்களை இழந்து வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தார்களே—அவர்கள் பால் தன் கடைக்கண்களைத் திருப்பியதுண்டா? அவர்கள் புதுவாழ்வுக்காகக் கமிட்டி ஒன்றை நிறுவியதுண்டா?

—விழலுக்கு நீர் பாய்ச்சும் வேலையிலே ஈடுபட்டிருக்கும் மாஜி நீதிபதியாரும், அவருக்கு நன்கொடை உதவி நன் மதிப்பு பெறப் போகும் ஆஸ்திக அன்பர்களும் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லட்டும்!

குடியரசு மலர்கிறது!

ஜின்னாவின் கனவு பலித்துவிட்டது—ஆம்; பாகிஸ்தான் காலனி அந்தஸ்து—என்னும் நிலையிலிருந்து மாறி சுதந்தரக் குடியரசாக பிரகடனப் படுத்தப்பட்டுவிட்டது!

கருவிலிருக்கும்போதே ஏக பாரதக் கொள்கையைச் சுக்குநூறு செய்துவிட்டு உதயமாயிற்று பாகிஸ்தான்!

ஆனால் ஜின்னாவுக்குப் பிறகோ பிறைக்கொடி ஏந்திய பட்டாளத்தார் இடையே பிளவும் பூசலும் ஓங்கிவிட்டது!

அதுவும் லியாகத் அலிகானுக்குப் பிறகு, வீறு கொண்டு விடுதலை முரசு தட்டிய முஸ்லிம் லீக் 'காங்கிரஸ் கட்சி'யாக மாறி பிறந்த லட்சியத்தையே புதைகுழிக்கு அனுப்பிவிட்டது!

பதவிப் பித்து — கீழ் வங்கத்திலே உருது மொழியைக் கட்டாயமாகத் திணிக்க முயன்றது—அமெரிக்காவுடன் அந்தரங்கமாகக் குலாவ ஆரம்பித்தது—இந்தப் பட்டியலும் பெருக ஆரம்பித்தது!

– ஜின்னாவின் சவத்தின்மீது மண்ணைவாரி இறைக்கும் இதுபோன்ற செயல்கள் பாகிஸ்தான் பெயருக்கு மாசாக வந்து சேர்ந்தன!

எனினும் இப்போது பாக். குடியரசு நாடு! எனவே வாழ்த்துகிறோம்!

பாக். அரசியல் கடிவாளத்தைக் கையிலேந்தி யிருப்பவர்களோ டாலர் சீமாட்டியின் மாய வலையிலே கண்மூடித் தனமாய் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். அந்த நிலை கண்டு பரிதாபப் படுகிறோம்! கண்டிக்கிறோம்!

★ தோல்வி - தொகையரு ! ★

'வீதியில் நின்று கேட்டால் வீதிக்கே இறங்கி வந்து பதில் சொல்லுவேன்'—அன்று; இப்படி கர்ஜித்த 'பாரத ஜோதி' இன்று துக்கம் தொண்டையை அடைக்க, தழுதழுத்தக் குரலில் கசிந்து கண்ணீர் மல்கும் விதத்திலே கடிதம் ஒன்று தீட்டியிருக்கிறாராம்; இங்கிருக்கும் காமராசருக்கல்ல-மகாராஷ்டிர காங்கிரஸ் தோழர் ஒருவருக்கு!

பம்பாய் மாநிலச் சீரமைப்பு பிரச்னையால் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைதான் அவர் சிந்தனைக் கதவை ஓயாமல் தட்டிக்கொண்டிருக்கிறதாம் - அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் நாட்டின் முதல்வர்!

"பம்பாய் மாகாணப் புனரமைப்புச் சிக்கலால் ஏற்பட்டுள்ள நிலைமையை நான் எனது சொந்த தோல்வியாகவே மதிக்கிறேன். இந்த உணர்ச்சியால் நான் பெரிதும் மனந் தளர்ந்திருக்கிறேன்; பம்பாயில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மட்டுமல்ல எனது மனத் தளர்ச்சிக்குக் காரணம். மகாராஷ்டிர மக்களின் இதயங்களுடன் கொண்டிருந்த உறவை நான் இழந்து விட்டதை நினைக்கும்போது தான் எனது மனம் பெரும் வேதனையடைகிறது இந்த நிலை எனது வாழ்க்கையில் ஒரு சோக நிகழ்ச்சியாகும்"

இந்திய உபகண்டத்தின் முடிசூடா மன்னர்; அவர் தீட்டியிருக்கும் வாசகங்கள் உண்மையிலேயே இதயத்தை அனற்பட்ட மெழுகென உருக்கி விடும் விதத்திலே அமைந்திருப்பதை நாம் மறுக்கவில்லை.

"எகிப்து எங்கே? கிரீஸ் எங்கே? திராய் நகர் எங்கே? மணிமுடி தரித்த ரோமாபுரி எங்கே? வெனிஸ் நகரின் செருக்கு எங்கே? எல்லாம் மண்ணோடு மண்ணாயிற்று"—என்று, ஏகாதிபத்தியங்களின் எழுச்சி பற்றியும், எழிலும்—பொலிவும் பெற்று வாழ்ந்த அத்தகைய ஏகாதிபத்தியக் காவலர்களின் செருக்கு ஏன் மண்ணோடு மண்ணாய்விட்டது என்பது பற்றியும், சுவை சொட்ட—படிப்போர் நெஞ்சங்களிலே விடுதலைக் கிளர்ச்சி கொப்பளிக்கும் விதத்திலே 'உலக சரித்திரம்' தீட்டியிருக்கும் நேரு பண்டிதர்; அவருக்கே உரித்தான மறதியின் விளைவாக, வாழ்நாளிலேயே பெரியதொரு தோல்வியைத் தழுவிக்கொண்டதாக வருந்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

தன்னைச் சுற்றிலும், தானே ஒரு விபரீத சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு; அந்த சிக்கலிலிருந்து விடுபட முடியாத நேரத்திலே, மகாராஷ்டிர தோழர் ஒருவருக்கு, உள்ளத்தை உருக்கி, கேட்போர் அனுதாபப் படுகின்ற விதத்திலே உருக்கமான கடிதம் ஒன்று தீட்டி இருக்கிறார் பண்டிதர். அதைவிட, இதயத்தைத் தொடுகின்ற முறையிலே வெற்றிமிக்க சரித்திரக் கதாநாயகர்களில் ஒருவனை நெப்போலியனை, தன் தோல்விக்குக் காரணம் கூறுகிறான்: கண்களில் நீர் கொப்பளிக்கும் விதத்திலே—கேட்போர் மனம் இளகுகின்ற முறையிலே:

"என்னுடைய வீழ்ச்சிக்குப் பிறரைக் குறைகூறிப் பயனில்லை; குற்றம் என்னுடையதே; எனக்கு நானே கொடிய சத்ருவாகிவிட்டேன்; என் தோல்விக்கு முழுக்க முழுக்க நானே காரணம்" சாம்ராஜ்யப் பஞ்சணையிலே, செல்வாக்குச் சாமரம் வீசும் சேடியர் புடைசூழ, போகபோக்கியத்திலே புரண்டுகொண்டிருந்த மாவீரன் நெப்போலியனின், இந்த உருக்கமான வாசகங்கள் இந்த நேரத்தில் நம் நினைவைத் தொடுகின்றன.

தன் சக்தியையும், செல்வாக்கையும் தவறான வழியிலே திருப்பிவிட்டு, ஆதிக்க சிமாட்டியின் அணைப்பிலே சித்தம் பேதலித்திருந்த நெப்போலியன் தன் தோல்விக்குத் தானே காரணம், என்று குறிப்பிட்டிருக்கும் இந்த நிகழ்ச்சிக்கு நேரு பண்டிதர், தான் தீட்டிய உலக சரித்திரத்தில் ஒரு விமர்சனம் தந்திருக்கிறார்.

"அதிகாரம் அவனைக்கெடுத்து விட்டது. முன்னைப் போல் அவ்வளவு திறமையாக இயங்குவதற்கு அவனால் முடியவில்லை"—என்று.

'என் தோல்விக்கு நான்தான் காரணம்' என்றான் நெப்போலியன்!

'அதிகாரம் அவனைக் கெடுத்து விட்டது; திறமை வற்றிவிட்டது அவனுக்கு' என்று குற்றம் சாட்டியிருக்கிறார் நேரு!

அவரே இன்று எழுதுகிறார்: "மாநில சீரமைப்பு விஷயத்திலே மக்களிடையே இருந்த செல்வாக்கை—உறவை இழந்தது குறித்து வருந்துகிறேன்; இது என் வாழ்நாளிலேயே ஒரு சோக நிகழ்ச்சியாகும். இந்த நிலையை நான் என் சொந்த தோல்வியாகவே கருதுகிறேன்." என்பதாக.

வரும்பொருள் உரைக்கின்ற ஆற்றல் அமைச்சர்களுக்கு அணிகலம் என்பார்கள். நாம் குறிப்பிடுவது-வரும் பொருள் உரைக்க வேண்டாம்; வரவிருக்கும் விளைவுகளையாவது உணருகின்ற அரசியல் ஞானம் இருக்க வேண்டாமா என்பது தான்.

அன்று வீதியிலே கேட்பவர்களுக்கு வீதியிலே பதில் சொல்வேன்' என்று கொக்கரித்துவிட்டு, இன்று மக்களிடையே இருந்த உறவைக் கெடுத்துக் கொண்டேன், என்று குழம்புவதால் யாருக்கு என்ன பயன்?

மாநிலச் சீரமைப்பிற்கு இந்திய உபகண்டத்தின் பரப்பிலெல்லாம் மலையென எதிர்ப்பு திரண்டெழுந்த போது, காங்கிரஸ் வட்டாரத்திலேயே கண்டனம் கிளம்பியபோது, மாநிலத்து அமைச்சர்களில் மானமுள்ள சிலர் ராஜிநாமாக் கடிதத்தை நீட்டிய போது பழுதடைந்த விழியினராய், கேளாக் காதினராய், இருந்த நேரு பண்டிதர் 'அதிகாரம் அவனைக் கெடுத்து விட்டது என்று நெப்போலியனைக் குற்றம் சாட்டும் இவர், 'மாநில சீரமைப்பு பற்றி முடிவு செய்யப்பட்டு விட்டது' என்று குறிப்பிட்டது எந்த நியாயத்தை அடிப்படையாகக் கொண்டதோ நாமறியோம்!

அதிகாரம் கையிலே இருக்கிறது என்ற காரணம்தான்; பண்டிதரை அப்படிப் பேசச் செய்தது என்பதைத் தவிர வேறென்ன கூற முடியும்?

'மாநிலச் சிக்கலால் ஏற்பட்டுள்ள நிலைமையை நான் என் சொந்தத் தோல்வியாகவே மதிக்கிறேன்' என்று இன்று வருந்துபவர், நாட்டு மக்களின் அபிப்ராயத்திற்கு சற்றேனும் தலை வணங்குகிற 'ஜனநாயகப் பண்பு' அன்று இருந்திருந்தால் மக்களின் இதயங்களிலேயிருந்த நல்ல உறவையும் பாழ்படுத்திக் கொள்ளாமல்; பம்பாயிலே நடந்தது போன்ற 'அவமரியாதைகளை', தவிர்த்து; அவர் கூற்றுப்படியே இன்று தன் வாழ்விலே ஏற்பட்டு விட்டதாகக் கருதும் 'சோக நிகழ்ச்சியை' சந்திக்காமல் இருந்திருக்கலாமல்லவா?

"அதிகாரம்; மாயக்கண்ணாடிகள் பதிக்கப் பட்டிருக்கும் ஒரு மயக்கு மாளிகை. அதிலே உலவுபவர்களுக்கு 'தங்கள் சரியான முகம்' தெளிவாகத் தெரிவதே இல்லை; பல சாம்ராஜ்யங்களின் சரிவிற்கும் அஸ்தமனத்திற்கும் காரணம் இதுதான்!"

அரசு கட்டிலிலே அந்தஸ்து மாளிகையிலே வீற்றிருப்போருக்கு மேலைநாட்டு அறிஞர் ஒருவர் சொல்லி இருக்கும் இந்த வாசகங்கள் மனப்பாடமாக இருக்க வேண்டியது; எவ்வளவு அவசியமென்பது, புகழ் போதையிலே மிதந்து கொண்டிருக்கும் நேரு பண்டிதரின் 'இந்த உருக்கமான' கடிதத்தைப் பார்க்கும் பொழுது தெளிவாகிறதல்லவா? ★

தமிழகத்தின் நிலை !

ஏடேந்தி கேடுகளையும் நோக்கோடு நாட்டிலே நடமாடும் பத்திரிகைகள்; உலகத்தின் நிலை காட்டும் தூய கண்ணாடிகளாக இருக்க வேண்டும் என்பதை நல் இதயம் கொண்டோர் மறுக்க முடியாது.

கொள்கை வேறுபாடு காரணமாக செய்திகளை இருட்டடிப்பு செய்வதும், போலிச் செய்திகளுக்கும், புரட்டுகளுக்கும் பட்டாடை உடுத்தி-மக்கள் பார்வைக்கு வைப்பதும், மேனிக்கு மெருகேற்றி, மாலை மங்கியதும், தெரு முனையிலே 'கண் சுழற்றி' நிற்கும் விலைமாதின் செயல் போன்றதாகும்! அதை விட தாயகத்தின் செய்திகளை மூலையிலே தள்ளி விட்டு, பதவியிலிருப்போரின் தவறுகளுக்கு பக்கமேளம் கொட்டுகின்ற பண்பு; தான் பெற்ற குழந்தையின் குரல்வளையை நெருக்கிக் குப்பையிலே வீசுகின்ற கொடுஞ் செயலைப் போன்றதாகும்.

எனினும் தென்னகத்தில் உலவும் தேசிய ஏடுகள், அவர்களுடைய பாணியிலேயே கூறுவதென்றால் 'பத்திரிகா தர்மத்தை' மறந்துவிட்டு நடைபழகும் கொடுமையை நாடறியும்; இத்தகைய ஏடுகளின் போக்கு குறித்து சென்றகிழமை அண்ணாமலை நகரில் உறையாற்றிய பேராசிரியர், டாக்டர் மு. வரதராசன் அவர்கள், 'தமிழ் நாட்டுப் பெரிய பத்திரிகைகளை நம்பாதீர்கள் அந்தப் பத்திரிகைகள் நம்மவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதில்லை; அவைகள் மேலிடத்தில் நல்ல பெயர் வாங்குவதற்காக இருக்கின்றன; மற்ற மாநிலத்து ஏடுகளோடு தமிழ் மாநிலத்து ஏடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இது விளங்கும்...இனி இந்தப் பத்திரிகைகள் தமிழகத்தில் விற்பனையானாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை; காரணம் தமிழகத்தின் நிலை அப்படி இருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்;

இரண்டாவது ★ ★ ஷேக்ஸ்பியர்!

“நான் எழுதித்தான் பிழைக்க வேண்டும் போலிருக்கிறது, நண்பனே!”

“ஏனப்பா!”

“வயிறு பசியைப் பொறுக்கவில்லை: வேலையோ ஒன்றும் கிடைக்கவில்லை; அதனால்தான்”

—இப்படிக் கண்ணீர் வடித்தவன்தான் பிறகு எழுத்துலக வேந்தனாக மாறினான்!

பெற்றிருப்பதோ கல்லூரிப் பட்டம்! அதுவும் டாக்டருக்கான விருது!

அவனோடு படித்தவர்களெல்தாம் இன்று பெயர் பெற்ற டாக்டர்களாக — செல்வாக்கு சந்தனத்தை மார்பிலே பூசிக்கொண்டு புகழ் வாடையிலே மிதந்துகொண்டிருந்தனர்.

அவனோ, ‘அய்யோ, பசிக்குதே!’ என்று அடி வயிற்றைப் பிடித்தபடி அலைந்து கொண்டிருந்தான — ஒரே ஒரு ஆசையின் காரணமாக!

மருத்துவ நிபுணனாக முடியவில்லை!

வாய்க்கு ருசியாகச் சாப்பிட முடியவில்லை!

—எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு ஆசைதான் காரணம்!

ஆமாம்; எழுத வேண்டுமென்ற ஆசை! எழுத்தாளன் என்று பிறர் தன்னை ஒத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை!

அதை நிறைவேற்றுவதற்குத்தான் முயன்றான்; ஆனால் முடியவில்லையே!

பதினொரு ஆண்டுகள் பல்லிளித்தபடி வறுமை அவனை பயங்காட்டி யிருக்கிறது!

“படித்த முட்டாளே! டாக்டருக்குப் படித்திருந்தும் நீ ஒரு நாள்கூட வைத்தியம் பார்த்ததில்லையாமே-அடப் பயித்யமே!” என்று நண்பர்கள் அவன் மீது கேலிக் கணைகளைத் தொடுத்திருக்கின்றனர்!

—இருந்தும் அவன் துவளவில்லை; எனவேதான் இன்று துருவ நட்சத்திரமாகத் திகழ்கிறது, அவன் பெயர்!

சோமர் செட் மாம்—

ஆங்கில இலக்கியத்தில் பற்றுகொண்ட அனைவருக்கும் இந்தப் பெயர் பிடித்தமானதாயிருக்கும்!

சிறந்த சிறுகதை எழுத்தாளன்; சீர்மேவும் நாவலாசிரியன்: பெர்னட்ஷாவுக்கு அடுத்தபடி கொண்டாடப்படும் நாடகாசிரியன்.

—இவ்வளவும் **மாம்** பெற்றிருக்கும் புகழ்ச் சரங்கள்!

—இவர்தான் ஒரு காலத்தில் உதவாக்கரை யென்று பெயரெடுத்தார்!

இவர் புகழ் பெற்றதே ஒரு சுவையான நிகழ்ச்சி!

லண்டன் நகரத்துத் தியேட்டர் ஒன்றில் யாரோ எழுதிய நாடகமொன்றுக்கு வசூல் ஆகவில்லை;

எனவே கொட்டகை முதலாளி வேறொரு நாடகம் தயாராகும் வரையில் ஓடக்கூடிய ஒரு சாதாரண நாடகத்தைத் தேடிக்கொண்டிருந்தார்!

மாம் தன்னுடைய **‘லேடி பிரடரிக்’** என்னும் நாடகத்தைச் சமயமறிந்து நீட்டினார்!

அடுத்த நாடகத்திற்கான ஒத்திகைதான் முடிவடைந்து விட்டதே! ஒரு சில நாட்கள் தானே!—என்ற நினைப்புடன் முதலாளி இந்த நாடகத்தைத் துவக்கி வைத்தார்!

இரண்டே நாட்களில் முடித்துவிடலாமென்றுதான் நினைத்தார்; ஆனால் அதுவோஓடிக்கொண்டே இருந்தது!

லண்டன் நகரமெங்கும் இதுவே பேச்சு!

“ஆஸ்கர் ஒயில்டின் அருமையான வசனங்களைப்பற்றிஇப்படித்தான் பேசினார்கள். இப்போதும் அதைப் போலவே பேசுகிறார்களே! இதில் ஏதோ சிறப்பு இருக்கத்தான் வேண்டும்!”

—நாடகத்திற்கான வசூல் உயர்ந்து கொண்டே யிருந்தது—சோமர்செட்டுடைய கண்களைக் கட்டியிருந்த கருப்புத்துணி அகற்றப்பட்டது;பிறகென்ன; புகழேணியில் ஏற வேண்டியதுதானே!

“பத்து ஆண்டுகள் அடிமையைப் போல இருட்டறையிலே வாழ்ந்திருப்பான்; ஆனால் அவன் கூட பத்தே நிமிஷங்களில் புகழொளியில் பளிச்சிட முடியும்”—என்று சொல்வார்கள்!

சோமர் செட்டைப் பொறுத்த வரையிலே அது உண்மையாகி விட்டது!

சில ஆண்டுகளுக்கு முன் நியூயார்க் நகரத்திலே விமர்சகரெல்லாம் உலகத்தின் சிறந்த நாடகங்களில் சிலவற்றை தேர்ந்தெடுக்கக் கூடினார்கள்.



அவர்கள் தேர்ந்தெடுத்தது என்னென்ன தெரியுமா?

முதலாவது ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்!

இரண்டாவது சோமர்செட் மாம் எழுதிய ‘ரெயின்’ (மழை)!

‘ரெயின்’ பல நாள் சிந்தனையின் விளைவாக எழுந்ததல்ல! பல புத்தகங்களைப் புரட்டியதின் பயனுமல்ல!

ஒரு நாள் அவருடைய நண்பரொருவர் தூக்கம் வரும் வரைக்கும் படிப்பதற்காக ஏதாவது புத்தகமொன்றைக் கேட்டார்.

‘மிஸ் சேடி தாம்சன்’-என்னும் பெயரில் தான் எழுதிய சிறுகதையின் அச்சாகாத பிரதியொன்றை அவரிடம் கொடுத்தாராம், மாம்!

அந்த நண்பர் கதையைப் படித்தவுடன் மலைத்து விட்டார்—காரணம் அந்தக் கதை அவர் மனதைக் கவர்ந்துவிட்டது!

மறுநாள் சோமர் செட்டைச் சந்தித்து அந்தக் கதையை நாடகமாக்கலாமே? என்று கேட்டார்!

“சே! சே! இதையா? இது சாதாரண சிறுகதைதானே?”—என்று பதில் சொன்னார் மாம்!

நண்பர் விடவில்லை; அதன் விளைவுதான் ‘மிஸ் சேடி தாம்சன்’ ‘ரெயின்’ வடிவமெடுத்தது! சோமர்செட்டை ஷேக்ஸ்பியருக்கு அடுத்த சிறந்த நாடகாசிரியனாகவும் ஆக்கிற்று!

மத்தியான நேரம் இவருக்குப் பிடிக்காது; ஒரு மணி ஆனாலே இவர் பேனாவை மூடிவைத்து விடுவார்!

எழுதுவதற்குமுன் அரை மணி நேரம் ஏதாவது தத்துவங்களைப் படித்துக் கொண்டிருப்பார்!

இதுதான் இவரது குண விசேஷம்!

எழுத்தாளனாகி இரண்டு லட்சம் பவுன்களைச் சம்பாதித்திருக்கிறார்!

தெரிந்து கொள்ளுங்கள்: இவர் தான் ஒரு காலத்தில் பிச்சையெடுக்கும் நிலையிலே ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தார்—வயிறாரச் சாப்பிடுவதற்காக!

★

‘அய்யங்கார்’ சொல்லுகிறார்!

‘காலம் ஓடிக் கொண்டிருக்கிறதே’ இப்படிக் கவலைப் படுகின்ற குணம்தான்; வெள்ளையரை உலகஅரங்கில் ‘வளர்ந்த மனிதர்களாக’ உயர்த்தி இருக்கிறது, சூரியன் அஸ்தமிக்காத ஒருபெரிய சாம்ராஜ்யத்தை அவர்கள் கட்டியாள முடிந்தது” என்று குறிப்பிட்டாராம் ஒரு பேராசிரியர்!

‘காலம் பொன்னை விட மதிப்புடையது அதை வீணாக்காதே தம்பி!’ இதுதான் இன்றளவும் ஆங்கிலச் சிறுவர்களுக்கு அவர்தம் பெற்றோர் சொல்லித் தரும் ‘அரி நமோத்து சிந்த’மாக இருந்து வருகிறது!

ஆனால் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத தமிழகமோ, ‘இன்னும் பொழுது சாகவில்லையே’ என்ற பெருமூச்சோடு, இரவு போக — இருக்கும் நாளையும் ‘ராகுகாலமாக’ ‘எமகண்டமாக’ ‘குளிகை காலமாக’ பிரித்து சோம்பல் வாழ்வுக்கு வித்திடும் விபரீத தத்துவத்தை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அங்கே காலம் போதவில்லையே என்ற ஏக்கம்! இங்கோ, இருக்கும் காலத்தையும் ‘இராக்’ காலமாக்கிவிடும் போக்கு! இதன் விளைவுதான் நமக்குப் பின்னால் இருந்த நாடுகளெல்லாம் அறிவுத் துறையிலே சிகரத்தை எட்டுகின்ற உயரத்திற்கு சென்றுவிட்டன. நாமோ, நின்ற நிலை மாறாமல் நெடுங் கண்ணீர் விட்டபடி, ‘நீயல்லாமல் ஒரு துரும்பசையுமோ’ என்று பாடிக்கொண்டிருக்கும் பரிதாபகரமான நிலையிலே இருக்கிறோம்.

சென்ற கிழமை மைசூர் சட்டசபையில் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்க கே. அனுமந்தையா எழுந்தாராம்;

உடனே ஒரு உறுப்பினர் எழுந்து ‘இப்போது இராகுகாலம் வரவுசெலவு திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டாம்’ என்று கூறினாராம்.

அதையடுத்து, ஒருதோழர் ‘அரசாங்க வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கும் ‘இராகு’ காலத்திற்கும் என்ன சம்மந்தம்? இத்தகைய மூடநம்பிக்கைளால் மாகாண விவகாரங்கள் தடைபடுவது விரும்பத் தக்கதல்ல” என்று கூறினாராம். இதில ஆச்சரியம் என்னவென்றால் கூறிய தோழர் ஒரு அய்யங்காராம்!

இங்குள்ள ஆரிய–தேசிய ஏடுகள் ராகுகாலத்திற்கும்–ராசி பலனுக்கும் ஒரு பக்கத்தையே ஒதுக்கி விட்டுக் கொண்டிருக்கும் போது—எஸ். சீனிவாசன் (அய்யங்கார்) என்ற உறுப்பினர்துணிந்து சொல்லி இருக்கிறார் இராகு காலம் ஒரு மூடநம்பிக்கை என்று!

நாம் கூறும்போது பூணூலை உருவிக் காட்டும் அய்யர் வட்டாரம் ‘அய்யங்கார்’ எழுப்பும் இந்த ஈரோட்டுக் குரலுக்கு யாது பதிலிறுப்பரோ நாமறியோம்! ஆனால் இந்த செய்தியை வெளியிட்டிருக்கும், ‘தமிழ் நாடு’ இதழ் இந்த செய்தியோடு “இராகு காலத்தில் நல்ல காரியம் செய்யக்கூடாது என்பது மரபு” என்ற ஒரு ‘ஆறுதல்’ மொழியை இணைத்திருக்கிறது. அய்யங்கார் சொல்லுகிறார் ‘இராகு கால நம்பிக்கை மூடப்பழக்கம்’ என்று. ஆனால் இங்கிருப்பவர்களோ அது ‘மரபு’ என்று கூறி ஆறுதல் அடைகின்றனர்! மூட நம்பிக்கை எல்லாம் தமிழரின் மரபென்றால் அந்த ‘மரபு’ வடலூராரின் கருத்துப்படி மண்மூடிப் போவதில் தவறென்ன இருக்கமுடியும்?

'தமிழகம்' தெரியாத பெயராம்! கண்மூடியார், காமராசர்!

கோவையில் 18—3—56 அன்று நடந்த சிறப்புச் சொற்பொழி வில் அறிஞர் அண்ணு! மேடையில் தோழர்கள், ஈ. வி. கே. சம்பத், அப்பாவு, கோவை செழியன், இசைச் செல்வி கஸ்தூரி முதலியோர். (புகைப்படம் : சி. வி. கோபால், கோவை.)

திலகர் பிறந்து, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தீரக் குரல் கொடுத்த பிரதேசத்தில் சம்யுக்த மகாராஷ்டிரம் கேட்டு மக்கள் போர் தொடுத்திருக்கின்றனர்!

காங்கிரசின் காவலர் காந்தி பிறந்த இடத்திலிருந்து 'மகா குஜராத்தி' கோஷம்! பகத்சிங் பிறந்த பூமியில் சீக்கிஸ்தான் பிரச்சனை !

தாதாபாய் நௌரோஜியைக் கொடுத்த மண்ணில் இப்போது 'பம்பாய் நகர் மாநில'க் கோரிக்கை!

—இப்படி இந்த உபகண்டம் முழுவதும் மொழியின் அடிப்படையில் மாநிலம் வகுத்துக் கொண்டு வாழ துடிதுடித்துக் கொண்டிருக்கிருர்கள் !

மொழி வழிக் கொள்கை எங்கு 'பாரத பூமி'யில் ஒரு உள் நாட்டுப் போருக்கு வித்திட்டு விடுமோ என்று வேற்று நாட்டினரெல்லாம் எண்ணிடும் வகையில் அரசியல் நிகழ்ச்சிகள் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலேதான் புது மாநில அமைப்பு மசோதா ஒவ்வொரு பிராந்தியத்து சட்டசபை வாயிலையும் தட்டிப்பார்த்து, தேசீய வீரர்களின் கணக்கைப் பைசல் செய்யப் போகிறது !

சென்னையைப் பொறுத்தவரையிலே சட்டசபை காங்கிரஸ் கட்சியினர் மார்ச் 26ந்தேதி யன்று கூடி சுயமரியாதை உணர்வு பெற்றிருப்போர் அனைவரும் திடுக்கிடத்தக்க சில முடிவுகளை உருவாக்கி யிருக்கின்றனர்.

தேவிகுளம்; பீர்மேடு-சர்ச்சைக்குரியபிரச்சனை, என்று அவர்களே பலமுறைசொல்லியிருக்கிறார்கள்

எனவே அதைத் தவிர்த்து எல்லோரும் ஒருமனதாய் அங்கீகரிக்கக் கூடிய தன்மை பெற்றிருக்கும் சென்னைக்கு 'தமிழ் நாடு' எனப் பெயரிடும் விஷயத்திலும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சி தன்னுடைய குநட்டுப் போக்கை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது!

'பெயர் மாற்றத்திற்கு இப்போது அவசியமில்லையாம் !'

—சொல்லி யிருக்கிருர் காமராசர் !

தன்னுடைய கட்சிப் பிரிவிற்குத் 'தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி' என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்—

தன்னைத் 'தமிழ் நாட்டு நேரு' என்று தொண்டர்கள் கூறுவதைக் காதாரக் கேட்டு மகிழ்பவர்—

அந்தக் காமராசர்தான் சென்னையைத் 'தமிழ்நாடு' என்று அழைப்பதற்குத் தடை போடுகிருர் !

'தமிழ் நாடு' — இந்தப் பெயரிலே என்ன குறை கண்டுவிட்டார் காமராசர்?

'தமிழ்' - 'தமிழன்'-'தமிழ் நாடு' என்று சொல்ல ஏன் அச்சப்படுகிருர், அந்தப் பச்சைத் தமிழர்?

அவர் கூறும் நொண்டிக் காரணத்தையும் கேளுங்கள்:

'' சென்னை (மெட்ராஸ்) என்ற பெயர் நாடு முழுமைக்கும் மட்டுமல்லாமல், உலகம் முழுமைக்கும் தெரிந்த பெயராகி விட்டது. எனவே, அப்படிப் பட்ட ஒரு பெயரை இப்போது மாற்றி விடுவதால் எ... லாபமும் கிடையாது!''

தமிழ் நாடு என்ற பெயர் ...கத்திற்குத் தெரியாதாம்—

ஒரு மாநிலத்து முதல... பேசவேண்டிய பேச்சா இது!

தமிழகத்தின் பெயர்— ...உபகண்டத்து எல்லைக்கு அ... தெரியாதாம்! சொல்லு... காமராசர்!

வரலாற்றுப் புத்தகத்தின் ... ஏட்டிலே தமிழ்; தமிழ் நாடு... பெயர்! கல் தோன்றி ... தோன்ருக் காலத்தி... வாளொடு வாழ்ந்தவன்—... புகழ்! அகிலும், தேக்... அழகுச் சந்தனமும் ... நாட்டுக் கடற்கரையை ... பூமியாக மாற்றியிருக்... அப்போது அவர்களெ... பேசிப் பேசித் தீர்த்திருக்கி... 'உல்லாசச் செலவுகளால்... செல்வம் தமிழ் நாட்டுக்குப்... றதே!'—என்று!

மலை நிகர்த்த யானைக்... பிஞல் செய்யப்பட்ட கோ... யிலே, திராட்சை ரசத்தை ... விட்டு, 'எங்கேயடி அந்த... நாட்டு முத்து ?' என்று தன் ...ரை நோக்கி உத்தரவிட்டபோது உலகப் போழகி கிளியோ பாட்ரா ...ன் கிளி மொழியால் பன்முறை ...றிப்பிட்டிருக்கிருள், 'தமிழ் ...ாடு' 'தமிழ்நாடு' என்று !

...கடாரம் கொண்டவன் ; ஈழத்...தை வென்றவன்; வியாபாரப் ...பெருக்கத்தால் யவனத்தை ...அணைத்தவன்—என்று சரித்திரம் ...டிக்கும் ஒவ்வொரு நோத்திலும் ...தமிழ்—தமிழகம் — தமிழ்நாடு— ...என்ற வார்த்தைகள் கண்ணையும், ...கருத்தையும் கவர்ந்து வருகின்...றன, இதுகூடத் தெரியவில்லை ...ஊமை வேஷம் போடும் ஊராள...வந்தவருக்கு !

...சென்னை—என்ற பெயர் பிறக்...காததற்கு முன்பே தமிழ் நாடு ...உலகறிந்த பெயராய்த் திகழ்ந்தி...ருக்கிறது!

...நாற்றமெடுத்து ஓடும் ...கூவத்தை அணைத்துக்கொண்டு, ...ஐந்நூறு(?) ...மீனவர் குடிசைகளோடு திகழ்ந்த குக்கிராமத்தை ...சென்னப்ப நாயக்கனிடமிருந்து ...ஆங்கிலேயர் பெற்றதற்குப் பிறகு ...தானே இந்தப் பெயர் உருவா...யிற்று! அதை மாற்றியமைப்ப...திலே என்ன தவறு உண்டாகி...விடும்?

அழகான நவரத்ன மாலை; ...அதிலே இச்சைக்குகந்த பச்சை; ...விழிகளைப் பறிக்கும் வைரம்; ...முழு நிலவு போன்ற முத்து; ...குளுமை தரும் கோமேதகம்; மற்...றும் புஷ்பாராகம், வைடூரியம், பவ...ளம், நீலம் போன்ற கற்கள் பதிந்...திருக்கின்றன. அவைகளில் ...வைரத்தைத் தவிர மற்றவைகள் ...உதிர்ந்துவிட்டபின் அதை நவ...ரத்ன மாலை என்று அழைப்ப...திலே பொருளென்ன இருக்க ...முடியும்;

அதைப் போலத்தான் நிர்வாக ...வசதிக்கு மட்டுமே முதன்மை ...தந்து—இந்த நாட்டு மக்களின் ...மொழி உணர்ச்சிக்கு முட்டுக்...கட்டை போட்டு—வெள்ளைத் ...துரைத்தனத்தார் ஆந்திரா, கன்...னட, கேரளத்தின் சில பகுதிகள், ...தமிழகம் போன்ற பிராந்தியங்...களை சென்னை மாநிலம் என்ற ...பெயரிலே இணைத்து வைத்திருந்...தனர்!

...வெள்ளையன் செய்துவைத்துப் ...போன ஏற்பாடு தவறு-என்பதை ...உணர்ந்த ஆந்திர, கன்னட, கேர...ளத்து மக்கள் தனித் தனியே ...சென்றுவிட்டனர். இனியும் எஞ்...சியுள்ள பகுதியை தமிழ் நாடு ...என்று அழைப்பதுதானே நியாய...மும், நேர்மையும் கொண்ட செய...லாக இருக்கமுடியும்!

அப்படியென்ன ; இவர்கள் மாநிலங்களின் பெயரை மாற்றியமைத்ததே கிடையாதா ?

ஐக்கிய மாகாணம் (யுனைடெட் பிராவின்ஸ்) — நாடு அறிந்த பெயர்தான் !

வெள்ளைக்காரன் காலத்திலிருந்து உலகத்திற்கும் தெரிந்த பெயர்தான் இது !

—அதை ஒரு நொடிக்குள் மாற்றினர்களே 'உத்தரப் பிரதேசம்' என்று !

பெசவாடா நகரம் விஜயவாடா என்று வழங்குகிறதே!

அப்போது இந்தக் காமராசர் எங்கே போயிருந்தார் ? நாடறிந்த பெயர்; உலகறிந்த பெயர்; அதை மாற்றலாமா என்று அந்த நேரம் யாரும் பிலாக்கணம் படிக்கவில்லையே !

இப்போதுதான் ஞானோபதேசம் பெற்றிருக்கிருர், உலகறிந்த பெயரை மாற்றக்கூடாதென்று !

அய்யா, காமராசரே! எதிர்க்கட்சிக்காரர்கள் கரும்பு இனிக்கிறது என்று சொல்வதற்காக அது கசக்கும் என்று கதையளக்கும் காவலரே!

அவசியம் நேரும்போது — பொதுமக்கள் விரும்பும்போது— ஒரு மாநிலத்துப் பெயரை மட்டுமல்ல; பெரிய நாடுகளின் பெயரையே மாற்றியிருக்கிருர்கள்.

அயர்லந்து-பல நூறு ஆண்டுகளாக உலகத்துக்கு அறிமுகமான இந்தப் பெயர் பிறகு 'அயர்' என்று மாற்றப்பட்டிருக்கிறது!

—இப்படி மாறியதால் அயர் பூமியின் செல்வாக்கு செல்லாக் காசாகிவிடவில்லை!

இந்த உபகண்டத்து அரசியல் நிகழ்ச்சிகளிலும் பெயர் மாற்றும் சம்பவங்கள் புதிதல்ல.

—தென்னகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் குரலுக்கு மதிப்பு வைத்து பெயர் மாற்றுவதிலே இந்த ஆட்சிபீடம் ஆணவப் போக்கைத்தான் உரிமையாக்கிக் கொண்டிருக்கிறது!

பிணங்கள் பல விழுந்த பிறகுதான் பித்துமனம்கொண்டோரின் குணம் மாறியிருக்கக் காண்கிருேம்!

பொட்டி சீராமுலுவின் சவத்தைக் காட்டி எண்ணம் ஈடேறப் பெற்ற ஆந்திர மக்களைத்தான் நாமும் உதாரணமாக்கிக்கொள்ள வேண்டுமென்று நிலைமை உருவாகுமுன்பே, தம்மை அசையாத மேருவென்று நினைத்துக்கொண்டு, சோறு கேட்டோரின் வாயிலே புல்லைத் திணித்து, 'புசி'யென்று சொன்ன பிரெஞ்சு நாட்டு பௌலன் உருக் கொண்டிருக்கும் காமராசர் ஆட்சி பீடம் தமிழர் நெஞ்சம் தணலாகியிருப்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்! இவர்களைவிடக் கல் நெஞ்சும், மக்கள் சக்தி பற்றி சிறிதளவும் கவலைப்படா நோக்கும் கொண்டு கொம்பேறி நின்று கர்ஜனை புரிந்தவர்களெல்லாம் பிறகு மணல் மேடுகளாய் மாறி காலச்சூருவளியிலே ஊதி விடப்பட்டிருக்கிருர்கள்!

எனவேதான் மீண்டும் அறிவிக்கிருேம்—சென்னை 'தமிழ் நாடு' ஆவதால் டில்லி செங்கோட்டை சரிந்துவிடாது!

தமிழர் வீறுபெறுமுன், தரணியாள்வோரே, தன்மானம் பெறுங்கள்! இல்லையேல் தவிடுபொடியாகிவிடும் உங்கள் இறுமாப்பு!

★

கண்ணுடி வீட்டிலிருந்து....



தி. மு. கழகத்தின்மீது தந்தை பெரியார் பத்து குற்றச்சாட்டுகளை வீசியிருக்கிருர்!

மாயவரத்தில் 12-3-56 அன்று நடந்த தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் மு. கருணாநிதி பேசுகிருர். மேடையில் இரா. வெள்ளியங்கிரி, கிட்டப்பா, எம். எஸ். மணி முதலியோர்.

மாயவரத்தில், 12-3-56 அன்று நடைபெற்ற வேலாயுதம் மன்ற ஆண்டு விழா முகப்பு! தென்னை ஓலையினுல் இதை அழகுற அமைத்தவர்கள் குற்ருலம், தி. மு. க. தோழர்களான கண்ணன், வைத்தியநாதன், ராமச்சந்திரன் முதலியோர் !

(புகைப்படங்கள் ; ... ஸ்டுடியோ, மாயூரம்.)

‘குறள்’ இகழப்படுகிறதாம் !

நேரு பண்டிதர் முன்பொரு முறை சொன்னர் ''தமிழ் - இந்தியாவின் மாபெரும் மொழிகளில் ஒன்று; அதற்கு என் வணக்கம் உரித்தாகுக; தமிழ் மொழி இந்தியாவுக்கே ஜீவாதாரமான முக்கியத்துவம் வாய்ந்தது;'' என்று

நேற்று வரை தமிழ் என்ருல் நெற்றியைச் சுருக்கிக் காட்டியோர், நேத்திரங்களில் அலட்சியத்தை வெளியிட்டு மகிழ்ந்தோர் இன்று 'நானறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் எங்கும் காணேன்' என்ற கீதத்தை இசைத்து மகிழ்வதைக் காண்கிருேம்!

சங்கம் வைத்து தமிழுக்கு தேன் சுவை கூட்டிய இலக்கியப் பூங்கா தமிழ் நிலம் !

பூக்காடு தவழ்ந்து, புது மணம் மொண்டு, புலவர் நாவில்புரண்டு விளையாடிய செல்வத் தமிழ் தருகின்ற சுகம்; மாதுளை இதழ் பிளந்து மங்கையொருத்தி ஊட்டுகின்ற சுவையினும் இனபம் தரக் கூடியதாம் !

அந்த சுந்தரத் தமிழ்தான் இன்று சிதைக்கப் படுகிறது ; சீரழிககப்படுகிறது. இக்கொடுமை கண்டு விழிகளை நெருப்புக்கோளமாக்கி, நெஞ்சம் கொதித்து நிற்கிறது தமிழகம் !

தமிழ்தான் என் மூச்சு, என்று வாழ்வு நடத்தும் தமிழறிஞர்கள் கணணீர் சிந்துகின்றனர்.

'தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ருர் புரட்சிக் கவிஞர் !

அந்த அமுதான தமிழ்; இன்று நஞ்சோடு கலக்கப்படுகிறது !

அந்த உயிரனைய தமிழ்; இன்று உருமாற்றப்படுகிறது !

பூனை தான் ஈன்ற குட்டிகளைத் தானே தின்று, ஏப்பம் விடும் என்பார்களே; அதுபோல,—

தமிழன், அவன் மொழியை, மொழியின் இதயத்தை கோரமாகக் கிழித்தெறிகிருன்.

இந்தக் கொடுமை கண்டு, தமிழணங்கு குமுறுகிருள் ? தங்கம் நிகர் அவள் மொழி ; பகைக் குலத்தின் கோரக் கரங்களில் இருநது தப்பி—படடை தீட்டிய வைரமென, நிலவு பட்ட முத்தென, நித்திலச சுடர் வீசி பதினி வேடம் போடும் 'குடிகேடியாம்' இந்தியெனும் கள்ளி விரித்து வைதத வலைகளிலிருந்து தபபி — வளம்பெற்று அந்தப் 'பயணக் களைப்பு' நீங்குவதற்கு முன்னலே—'தேசிய' நங்கையின் பூச்சிலும்; போதையூட்டும் கிளிப் பேச்சிலும் மயங்கிக் கிடக்கும் சில தமிழர்கள், தன் குரல் வளைக்கு நேராக குத்தீட்டியை சொருக நினைககும் அநீதியைக் கண்டு அணை உடைத்த வெள்ளம்போல்; அவள் விழிகளிலிருந்து கண்ணீர் பொஙகிக் கொணடிருக்கிறது! சோகக கன்னியாக மாறுகிருள் தமிழனனை!

★

உலகம் புகழ் 'கீதாஞ்சலியை' வங்க மொழியில் வடிததுத் தந்தார் தாகூர்—வங்கம் தன் தாய் மொழி யென்பதால் !

உலக உத்தமர் தன் வாழ்க்கைச் சரிதத்தை 'குஜராத்தியிலே' தீட்டி மகிழ்ந்தார். குஜராத்திதான் கருவோடு ஊறிய தாய் மொழி என்ற காரணத்தால்.

தாய்!—மொழி! இ ர ண் டு ம் மனிதனின் விழிக்கு இணை ! அந்த 'இணை' விழிகளைத்தான். 'தேசிய மங்கை' தந்த போதையிலே மயங்கி, பழுது படுத்திக் கொள்ளுகிறது;

திருச்சி வானெலி நிலையம் !

★

திருச்சி — மொழி உணர்ச்சி அரும்பு விட்ட தடாகம் !

திருச்சி — தமிழ் மணக்கும் நீரோடை !

அந்த நீரோடை யி ல் தா ன் 'நஞ்சு' கலக்கும் திருப்பணியைச் செய்து வருகிறது அங்கிருக்கும் வானெலி நிலையம் !

தமிழறிஞர்கள் இது குறித்துப் பல முறை கண்டனம் எழுப்பியுள்ளனர்.

தமிழ் மொழிபால் அன்பு கொணட ஏடுகள் கண்டித்திருக்கின்றன !

எனினும், அந்த நிலையம் தன் போக்கினை மாற்றிக் கொள்ள முன் வரக்காணேம் !

தமிழ் மொழியை நசித்துவிட, 'தொல்காப்பியர் கா ல த் தி லிருந்தே (தொல்காப்பியம் 490 சூத்திரம் இதற்கு சான்று.) ஒரு கூட்டம் முயன்று வர, வேற்று மொழி படையெடுப்பும்; தீய நெஞ்சினரும், நல்ல ரத்தத்தில் 'விஷக்கிருமிகளை' புகுத்திவிடும் பணியிலே தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டு வரும் போது திருச்சி வானெலி நிலையமும், அந்த 'அழிவுப் படைக்கு' ஆலவ ட்ட ம் வீசுகின்ற போக்கிலே சென்று கொண்டிருப்பது தமிழகம் தாங்கிக் கொள்ள முடியாத அநீதியாகும்.

பிணமேடுகளை - கல்லறைகளை மொழிக்காக உருவாக்கி விட்ட தமிழர்களின் சுயமரியாதை ரத்தத்தை சூடேற்றுகின்ற இந்தக் கொடுமை, நல் இதயம் கொண்டோரால் சகித்துக் கொள்ள முடியாதுதான் ?

என்ருலும், அந்த வானெலி நிலையம் தொடர்ந்து செய்து வருகிறது, தமிழை சிதைத்து, உருமாற்றி, 'கதம்ப நிகழ்ச்சி' நடத்திக் கொண்டிருக்கிறது ?

''தமிழையும், தமிழறிஞர்களையும் புறக்கணித்து வருவதுடன் திருச்சி வானெலி நிலையத்தில் சாதிவெறியும் கூத்தாடுகிறது! தமிழ் மொழியை வெறுத்தும்; 'உயர்ந்த சா'திக்கென தனிச் சலுகை காட்டப்பட்டும், 'கிராம நிகழ்ச்சிகள்' என்ற பெயரால் குறள் கருத்துக்கள் நையாண்டி செய்யப்பட்டும், இந்தி ஆதிக்கத்திற்கு முதலிடம் கொடுத்தும், நிலையத்தார் தமிழைக் கொன்று வருகிருர்கள்.

அந்த நிலையத்தார் , நிலையத்தின் பெயரைக் கூட 'வானெலி நிலையம்' என்று தமிழில் சொல்ல வெட்கப்பட்டு 'ஆல் இண்டியா ரேடியோ' என்றும் 'ஆகாஷ வாணி' என்றும் கூறிவருவது தமிழகத்திற்கே மானக்கேடடை விளைத்து வருகிறது''

மேலே தரப்பட்ட குமுறல்கள் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 'தமிழ்நாடு' இதழில் வெ ளி யி ட்டிருக்கும் அறிக்கையில் காணக்கிடக்கிறது.

தமிழ் சிதைக்கப்படும் கொடுமை குறித்த; அந்த வானெலி நிலையத்தாரிடம் இருந்துவந்த இரண்டு அழைப்பையும் பு ற க் கணித்து விட்டாராம்! பாராட்டுகிருேம்!

அந்த அளவிற்கு திருச்சி நிலையத்தார் 'தமிழ்க் கொலை' செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

'ஆகாஷவாணி' என்று, ரிக் வேதத்தை ஜபிக்கும் அந்த நிலையத்தில் தமிழனுக்கு வேலை என்ன இருககிறது?

இந்தி ஆதிக்கத்திற்கும், சமஸ்கிருத காலட்சேபத்திற்கும், முதலாசனம் தரப்படும் அந்த நிலையத்தில், மொழிகள் குல முதல்வியாம் தமிழன்னைக்கு, இடம் கிடைப்பதும் பெருமையல்லவே!

முறைப்படி தமிழன்னை பெற வேண்டிய இடத்தில, மூக்கறுந்த இந்திக் கள்ளியை வைத்து; 'மூலாம்' பூசிக் கொண்டிருக்கிறது அந்த நிலையம்; வாழ்க!

சவ வாடை வீசும் சமஸ்கிருத 'கிழத்திற்கு', சந்தனத்தை வாரிப் பூசிக கொண்டிருக்கிருர்களாம் திருச்சி நிலையத் 'திருவாளர்கள்'!

குறள் தந்த கோமானுக்கு— வள்ளுவனுக்கு; அள்ளும் சிலம்பு தந்த இளங்கோவுக்கு இடமில்லையாம் அங்கே!

முத்துக் கடலுக்கு—முல்லைக் கொல்லைக்கு; முக் கலைக்கு, இடமில்லையாம்! தமிழன்னை புறக் கணிக்கப் படுகிருள்; வெட்கம்! வெட்கம்!

,தமிழ்-இந்தியாவின் மாபெரும் மொழி அந்த மொழிக்கு என் வணக்கம் உரித்தாகுக!''நாட்டின் முதல்வர் தமிழுக்கு வணக்கம் செலுத்துகிருர், தமிழன்னைக்கு சிரம் தாழ்த்துகிருர்.

ஆனல் இங்கிருக்கும் திருச்சி நிலையத்தாரோ குறள் கருத்துக்களை 'கிராம நிகழ்ச்சி' என்ற பெயரால் எள்ளி நகையாடுகின்றனராம் !

★

தமிழ்நாட்டின் ஜீவன் என்கிருர் நேரு ! அந்த 'ஜீவனை'க் காலடியிலே போட்டு நசுக்குகிறது திருச்சி நிலையம் !

தன்னை ஈன்ற தாயை அழித்து விடுகிறது வாழைக்கன்று !

திருச்சி நிலையத்தார் தமிழை அழிதது வாழ நினைக்கிருர்கள் !

உயர்ந்த சாதிக்கு அங்கேயும் உப்பரிகை ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறதாம் ! தமிழறிஞர்கள் புறக்கணிக்கப் படுகிருர்களாம் !

திருச்சி 'ஆகாஷ வாணி'-தமிழகத்திற்கு இழைத்துவரும் இந்த மானக் கேட்டிற்கு—தாய் மொழியின் இதயத்திலே வாள் பாய்ச்ச நினைப்போர் என்ருவது ஒரு நாள் அந்த மொழிக்கு முன்பு தலை வணங்கியே தீர வேண்டும் என் பதை நினைவுபடுத்த விரும்புகிருேம்.

—வில்வம்

★ சுகவாசிகள் ! ★

டில்லி மக்கள் சபைக்கு சென்றிருக்கும் பெரும்பாலான உறுப்பினர்கள், 'என் மகனும் கச்சேரிக்குப் போய் வருகிருன்' —என்ற கதைபோல, ஆடாமல் அசையாமல், கொலுப பொம் மைகளைப்போல வருகிருர்களாம்!

மக்கள் குரலை, மனறத்தின் நெடுஞ்சுவர்கள் கீரல் விழுகின்ற அளவிற்கு முழக்கமிடுவேன்-என்று மக்களிடையே கூறி ஓட்டு வாங்கிச் சென்றவர்கள், ஊமைகளைப்போல வாய்மூடிக் கிடக்கின்றனராம்—டில்லிக் கொலுவில் இதுவரை ஒரு முறை கூட வாய் திறக்காத உறுப்பினர்களும் இருக்கின்றனராம்!

சிரிப்புக்கு வித்திடும் இந்தத் தகவலை சென்ற கிழமை டில்லி மக்கள் சபையிலே தெரிவித்திருக்கிருர் சபாநாயகரான தோழர் அனந்தசயனம் அய்யங்கார்!

உறுபபினர்கள் சட்டசபையில் ஒருமுறையாவது பேசினேம் என்ற திருப்தியடைய வேண்டும்; அதற்காகவாவது உறுப்பி னர்கள் பேசவேண்டும் என்று கூறி, 'வாய்' இழந்த உறுப்பினர் களை பேசும்படி வற்புறுத்தியிருக்கிருர்; அப்படி பேசவேண்டும் என்பதற்கு வேருெரு காரணததையும் அவர் வெளியிட்டிருக் கிருர், அது இது.

''பொதுத் தேர்தல் சமீபத்தில் வரவிருக்கிறது, அதனல் இதற்குமுன் பேசாத மெம்பர்களும் பேச வேண்டுமென்று விரும்புகிறேன்''

இப்படிப் பேசசென்ருலே உடல் நடுக்கம் கொள்பவர்கள், மன்றத்தில் ஏன் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிருர் களோ நமக்குத் தெரியவில்லை.

''மெம்பர்கள் இனி என் பார்வையைப் பெறுவார்கள்'' இதைவிட மானக்கேடு வேறென்ன இருக்கிறது?

''தயவு செய்து பேசுங்கள்'' இப்படி சபாநாயகர் உறுப்பி னர்களைக் கேட்கின்ற நிலையா! வெட்கம்! வெட்கம்!!

பச்சைக் கல் மோதிரம்!



கும்மம்பட்டி. கொங்கு நாட்டிலே. ஒரு குக்கிராமம். "ஊர்களோ, பட்டி, தொட்டி, பெயர்களோ பொம்மன், திம்மன்". என்று அன்று பாடிச் சென்ற கம்பனின் கவிதைக்கு இன்றும் இலக்கணமாக விளங்கும் சிற்றூர். அங்குள்ள போலீஸ் ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர் அசோகன் தன்னுடைய 'டைரி'யைப் புரட்டிக்கொண்டிருந்தார். அறைக்கு வெளியே ஏற்பட்ட சிறிய சலசலப்பு, அவருடைய கவனத்தைக் கவர்ந்தது!

"ஏய் 144 என்ன அங்கே சத்தம்?" என்று அவருக்கே உரித்தான அதிகாரத் தோரணையில் கேள்விக் கணையை வீசினார்!

"ஒண்ணும் இல்லிங்கோ! யாரோ ஒரு பையன் மோதிரம் ஒன்றை விற்கப் போனானும்! அது திருட்டு மோதிரமாக இருக்கலாமெண்ணு நினைச்சி சேட் அழைச்சிண்டு வந்திருக்கிறாருங்கோ!" என்று 144 பதில் உரைத்தான்!

"எங்கே! அந்தப் பையனை இங்கே அனுப்பு?" அதிகாரத்தின் இரண்டாவது கட்டம்!

பன்னிரண்டு வயது பாலகன். பசி, பட்டினியின் கோர வடுக்கள் அவன் வதனத்தில் பிரதிபலித்தன. குழி விழுந்த கண்கள் நீரைக் கொட்டிக் கொண்டிருந்தது! பயத்தால் அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது!

"டேய், பையா! மோதிரத்தை எங்கே திருடினே?" சப் இன்ஸ்பெக்டர் மிரட்டினார்!

இல்லிங்கோ! "எங்க அம்மா கொடுத்தாங்கோ! வித்துட்டு வாடாண்ணு–அம்மாவுக்குஉடம்பு சரியில்லங்கோ—மருந்து வாங்கறதுக்காக மோதிரத்தை விற்கப் போனேன். அவர் என்னை இங்கே அழைச்சிகிட்டு வந்துட்டாருங்கோ. நான் திருடலிங்கோ—திருடவே இல்லை"—அலறினான் அந்த அனாதைச் சிறுவன்!

"எங்கேடா அந்த மோதிரம்?"

144 மோதிரத்தை சப் இன்ஸ்பெக்டர் கையிலே கொடுத்தான். "பச்சைக் கல் மோதிரம்" அவர் வாய் முணுமுணுத்தது. விழிகள் விரிந்தன. ஆச்சரியமும், அச்சமும் அவர் முகத்தில் சதிராடின.

"பையா! உண்மையை சொல்லி விடு. எங்கேயிருந்து இந்த மோதிரத்தை திருடினே" சப் இன்ஸ்பெக்டர் வார்த்தைகளிலே அவர் அறியாமலே ஒரு நடுக்கம் தோன்றியது!

"எங்கம்மாதானுங்கோ, கொடுத்தாங்கோ, நீங்க வேண்டுமானால் வந்து கேட்டுப் பாருங்கோ..." சிறுவனின் குறுகுறுத்த கண்கள் முத்து, முத்தாக கண்ணீர் சிந்தியது!

"பையா! அழாதே! உங்க அம்மா எங்கே இருக்காங்கோ? அவங்க பேர் என்ன?" அவசரம் தொனித்தது இன்ஸ்பெக்டர் வார்த்தைகளில்!

ஊர்க்கோடியிலே இருக்கிற குடிசையிலே இருக்கிறாங்கோ—பேரு பார்வதி......பையன் வாக்கியத்தை முடிக்கவில்லை. பார்வதி—பார்வதி... சப் இன்ஸ்பெக்டர் வாய் முணுமுணுத்தது. பையா, வா போகலாம், வீட்டுக்கு வழி காட்டு—என்று கூறிக் கொண்டே புறப்பட்டார், பையன் பின் தொடர்ந்தான். கான்ஸ்டேபிள்களெல்லாம், கன்னத்தில் கையை வைத்துக் கொண்டார்கள் இன்ஸ்பெக்டரின் செய்கை கண்டு!

சப் இன்ஸ்பெக்டர் மனதிலே புயல் வீச ஆரம்பித்தது. அவர் இதயத்தின் அடித்தளத்தில் மறைந்திருந்த பழைய நினைவுகள் மீண்டும் தலை தூக்கின! வாலிபத்தின் வசந்த மாளிகையில் அவர் வலம் வந்தபோது — நடைபெற்ற சம்பவங்கள்—அவர் வாழ்க்கைப் பயணத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அவர் நினைவில் சதிராடின! அவர் வாழ்க்கை ஏட்டின் ஆரம்ப அத்தியாயத்தைப் புரட்ட ஆரம்பித்தார்!

★

அவர் திருச்சி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதுதான், பார்வதி, அவர் வாழ்க்கையிலே குறுக்கிட்டாள்.

கல்லூரிக்குப் போகும்போதெல்லாம், கார் மேகக் கூந்தலழகி, தென்படுவாள். தேன்பாயும் அவர் உள்ளத்தில் வான்நிலவை நினைவூட்டும் அவள் முகமும், தேன்சிந்தும் செந்நிற இதழ்களும், கண்டோரை எல்லாம் தன்பக்கம் இழுக்கும் காந்தக் கண்களும்—அசோகனின் இதயத்தைக் கவர்ந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை தான்! அந்தத் தங்கப் பதுமை அசோக்கின் இதய மண்டபத்தில் சதிராட ஆரம்பித்தாள். அவனைக் கேட்காமலே அவனுடைய இதயக் கோயிலில் குடி ஏறினாள் அந்தக் கோமளவல்லி!

நாட்கள் நகர, நகர அவர்களின் கண்கள் பேசிக் கொண்டன—இதயங்கள், உறவாடின— கடிதங்கள் பறந்தன—முடிவில் காவேரிக் கரையில் அவர்களின் சந்திப்பு!

★

நீல நிறப் பட்டாடையின் மேல் சிதறிக் கிடக்கும் மல்லிகை மலர்கள் போல, நீலவானில் விண்மீன்கள் மின்னிக் கொண்டிருந்தன. சுந்தரவதன சந்திரன் தாரகைகளோடு கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தான்.

பார்வதி! வட்ட நிலவே! ஏன் வாட்டம்?

வாட்டமில்லை கண்ணாளா—வேதனையின் வடிவம்...

என் வேதனைக்கு காரணம் சோதனை நிறைந்த வாழ்வுதான் அசோக்! நீங்கள் ஏன் என் வாழ்வில் குறுக்கிட்டீர்கள், நானோ குடிசையில் குமுறும் ஏழை, வயோதிகத் தந்தை—வறுமையின் கொடுமை—இவைகள்தான் என் உடமைகள். அன்பின் அரவணைப்பிலே நாம் ஒன்றானோம். இந்த இன்பம் என்றைக்கும் நீடிக்குமா? நாம் வாழ்விலே ஒன்றாக உங்கள் பெற்றோர் சம்மதிப்பார்களா? இந்த சமூகம்தான் ஏற்றுக் கொள்ளுமா? உங்களை நான் சந்திக்காமலிருந்திருந்தால்......

"நம் வாழ்க்கையில் இந்த சுவையான கட்டம் நிகழ்ந்திருக்காது. பார்வதி! அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? இன்றும் போல் என்றும் ஒன்றாகவே இணைந்து வாழ்வோம்...பெற்றோர்கள் சம்மதித்தால் மாளிகைவாசம் இல்லாவிட்டால் மண் குடிசை இருக்கவே இருக்கிறது.

என்னை அகிலம் முழுவதும் எதிர்த்தாலும், என் கோகிலமே! உன்னைக் கைவிட மாட்டேன்.

கண்ணாளா! மண்ணுலகில் உங்களையன்றி வேறு உறவு எனக்கில்லை! எங்கேயோ பிறந்தோம், வளர்ந்தோம், காலம் நம்மை ஒன்று சேர்த்து விட்டது. இனி என் வாழ்வு உங்கள் கையில்.

என் இன்பமே! இன்முகம் காட்டி என் இதயத்தில் நுழைந்து விட்ட உன்னைக் கைவிடுவேனா! செக்கர் வானத்து சிவப்பை யெல்லாம் தேக்கி நிற்கும் உன் கன்னங்களும், செம்பவழத்தைத் தோற்கடிக்கும் உன் கனி இதழ்களும், முத்தைப் பழிக்கும் உன் முல்லைப் பற்களும், கதை பேசும் உன் கண்களும் என் இதயத்தில் அழித்தெழுதா சித்திரம் போல் பதிந்து விட்டன! தேன் மொழியாளே! தெவிட்டாத அமுதமே! இந்தக் கணையாழியை என் அன்பின் அடையாளமாக உன் சுந்தர விரலில் அணிவிக்கிறேன். நிலவொளியில் மின்னும் இந்தப் பச்சைக்கல் மோதிரம்போல் நம் வாழ்வும் பசுமையாக மலரட்டும்!

அத்தான்! மோதிரத்தை அணிவித்து உங்கள் வாழ்க்கைத் துணைவி என்ற முத்திரையையும் பதித்து விட்டீர்கள். கணையாழியை அணிந்து விட்டு, காலப் போக்கில் காதலியைக் கானகத்தில் கண்ணீர் வடிக்கச் செய்த துஷ்யந்த மகாராஜாவாக மாற மாட்டீர்களே!

என்ன பார்வதி! இன்னமும் சந்தேகமா? அப்படித்தான் நான் மறந்து விட்டாலும் 'பரதன்' நம்மை ஒன்று சேர்த்து விடுவானே!

உண்மைதான் ஆனால் பரதனால் ஒன்று சேர்க்கப்பட்ட சகுந்தலை மீண்டும் துஷ்யந்தனோடு வாழவில்லையே!

ஏன் பார்வதி! இந்த நேரத்தில் அந்த சோகக் கதை நமக்கு!

★

'இதான் சார் எங்க வீடு' என்ற குரல் அவரைத் தட்டி எழுப்பியது பழைய நினைவிலிருந்து விடுபட்டு அந்த குடிசையிலே நுழைந்தார் அசோகன்!

கிழிந்த பாயின்மேல் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது அந்த உருவம்.

"தம்பி, யாருடா வந்திருக்கிறது" என்ற வார்த்தைகள் வேதனைக்கிடையே வெளிவந்தன.

"சப் இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறாரம்மா..."

"சப்-இன்ஸ்பெக்டரா? இன்னும் யார் உயிரையடா எடுத்துப் போக வந்திருக்கிறார்? உன் அப்பாவின் குருதி வெள்ளத்திலே நீச்சலடித்தது போதாதா அவருக்கு? இன்னும் அவருடைய வெறி அடங்கவில்லையா? இதோ என் இரத்தத்தை வேண்டுமானாலும் குடிக்கச் சொல் ... அப்பொழுதாவது அவருடைய தாகம் தணியட்டும்"

"பார்வதி! இப்படி பார்! என்னைப்பார்! நான் யாரென்று உனக்குத் தெரிகிறதா?"

பார்வதியின் குழி விழுந்த கண்கள் இன்ஸ்பெக்டர் மேல் பதிந்தன!

"யார்? அசோகன்; அட பாவி! நீயா?"

"ஏன் பார்வதி கோபப்படுகிறாய்! நான் சொல்வதைக் கேள்!"

"நீ எதையும் சொல்லவே வேண்டாம், நீ சொன்னதை யெல்லாம் நம்பி, நம்பி நான் என் வாழ்க்கையையே நாசமாக்கிக் கொண்டேன்—இன்று என் வாழ்வையே சாம்பல் மேடாக்கி விட்டாய்..."

பார்வதியால் மேலே பேச முடியவில்லை...கண்களில் வழிந்த நீர் அவளுடைய ஒட்டி உலர்ந்த கன்னங்களில் கோடிட்டுச் சென்றது...மூச்சு திணறியது ... அவள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அசோகனின் உடலை ஊசி போல் குத்தின. அவளுடைய விழிகளில் முத்து, முத்தாக வழிந்த கண்ணீர் அவனுடைய இதயத்தைத் துப்பாக்கி ரவைபோல் தாக்கின...

"பார்வதி... என்னை மன்னித்து விடு...விதி நம்மைப் பிரித்து விட்டது..."

"விதி...எது விதி... உன் மதி கெட்ட செய்கையை விதி என்ற போர்வையால் ஏன் மறைக்கிறாய்.. என் வாழ்வைதான் கெடுத்தாய். உன்னால் அனாதையாக விடப்பட்ட என்னை-உன்னால் வஞ்சிக்கப்பட்ட இந்த அபாக்கியவதியை —உடைந்த வீணையை— கசங்கிய மலரை—காப்பாற்றிய அந்த உத்தமரின் உயிரையும் குடித்து விட்டாயே—பாவி...உனக்கு நாங்கள் என்ன துரோகம் செய்தோம்"

"என்ன பார்வதி கூறுகிறாய்... எனக்கு ஒன்றும்புரியவில்லையே.."

"புரியாது இன்ஸ்பெக்டரே—புரியாதுதான்...அதிகாரமும் ஆணவமும் உம் கண்களை மறைத்துக் கொண்டிருக்கும்போது இந்த அபலையின் சோகக் கதை எப்படி புரியும்?"

"பார்வதி...வாட்டாதே என்னை. உன் வார்த்தைகள் என் இதயத்தைப் பிளக்கிறது....இனி என்னால் தாங்கிக் கொண்டிருக்க முடியாது உன் கணைகளை..."

"கணையாழியை கரத்திலே அணிந்துவிட்டு என் சித்திரத்தை உமது இதயத்திலே இருந்து அழித்துவிட்ட உமக்கு எப்படி

தொடர்ச்சி 10-ம் பக்கம்



தமிழர் திருமணத்தில் தாலி

ஆசிரியர்:
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

வெளியீடு;
செல்வி பதிப்பகம், காரைக்குடி.

'பண்டை இலக்கியங்களில் மங்கல நாணோ, தாலியோ தமிழர் திருமணத்தின் போது கட்டப்பட்டதாகத் தெரியவில்லை' என்ற பல மேற்கோள்கள் காட்டி இந்நூலில் ஆராய்ச்சி செய்திருக்கிறார் டாக்டர் இராசமாணிக்கனார். அருமையான ஆராய்ச்சி நூல்! ஆசிரியரின் புலமை ஒவ்வொரு பக்கத்திலும் தெளிவாகத் தெரிகிறது. தமிழர் சமுதாய வரலாற்றிலிருந்து அவர் காட்டியிருக்கும் சான்றுகள் சிந்தை மகிழ்விக்கத் தக்கதாய் அமைந்திருக்கின்றன.

★

புழுதிமேடு

ஆசிரியர்: அரங்கண்ணல்
விலை ரூ. 1-4-0
வெளியீடு: அன்புப்பதிப்பகம், பொறையார், தஞ்சைமாவட்டம்.

சொல்லழகும் நடையழகும் ஒருங்கே பெற்ற நண்பர், அரங்கண்ணல் எழுதிய ஏழு எழுத்தோவியங்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

புல்லேலந்திகளின் வரவால் வாளேந்தி வாழ்ந்த தமிழகத்து வேங்கைப் புலிகள் பூனைகளாய் மாறிய சோகக் கதை பல கோணங்களிலே படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

'பூந்தோட்டம்' — முத்துக் கடலும், முல்லைக் கொல்லையும் கொண்டு, நிகர் இல்லை— என வாழ்ந்த பழைய தமிழகத்தின் சித்தரிப்பு'

'ஐயங்குளம்'-அய்யர்கள் தென்னகத்தைக் கண்ணீர்க் குளமாக்கியதை விளக்கும் சரித நிகழ்ச்சி! 'செல்லக்கிளி'— அய்தர் அலியின் வாழ்க்கை ஏட்டின் சில உணர்ச்சி வரிகள்!

மற்றும் 'சொறிசிரங்கன்', 'சாணக்யன்', 'அப்போதுகூட' 'புழுதிமேடு' இவை எல்லாமே இனிக்கின்றன!

புதைந்து கிடக்கும் சரித நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கும் சம்பவங்கள் புத்தகத்திற்குப் புது மெருகு தருகிறது! பூக்கடைக்கு சிபார்சுவேறு வேண்டுமா? உங்கள் நூலகத்தில் இருக்கவேண்டிய சுவடிகளில் இதுவும் ஒன்று!

★

பச்சைக் கல்......

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

இது நினைவிலிருக்கும்... சென்ற வாரம் வெறி பிடித்தவன் போல, நடு ரோட்டில், உன் அதிகார துப்பாக்கிக்கு பலியானாரே குமரன்—அவர்தான் உன்னால் கைவிடப்பட்டு — தந்தையை இழந்து— குடிசையிலே குமுறி-குமுறிக் கணணீர் வடித்துக் கொண்டிருந்த எனக்கு வாழ்வளித்த உத்தமர். அன்று ஆசை காட்டி பின் மோசம் செய்து என்னைக் கொல்லாமல் கொன்றாய். அவரை கொன்று இன்று என்னைக் கொல்லுகிறாய்...அடப் பாவி — உனக்கு அவர் என்ன செய்தார்... சமுதாய சாக்கடையில் உன்னால் தூக்கி அடிக்கப்பட்ட என்னைக் காப்பாற்றிட உத்தமராயிற்றே அவர்... வாழ்விழந்த எனக்கு வாழ்வளித்த வள்ளல்... இந் நாடு—என் நாடு! மாற்றானுக்கு அடிமைப் படுவதா? எங்கள் உரிமையைத் திருப்பிக் கொடு.. தேவிகுளம் —பீர்மேடு— தமிழருக்கு சொந்தம்... அதைக் கை நழுவ விடோம்... என்று கூறியது தவறா? அவருடைய வாதத்திற்கு பதில் சொல்ல முடியாத நீங்கள் துப்பாக்கியால் பதில் சொல்லி — அவருடைய உயிரைப் பலியாக்கிக் கொண்டீர்களே! பாவிகளே! புவியில் வேறு கதியற்ற நான் என்ன செய்வேன்- மரணத்தின் கோரப் பிடியிலிருக்கும் நான்...அறியா பருவத்திலே என் செல்வன்...அன்று சுழலும் உன் விழிகளால் என் இதயத்தை சுட்டெரித்தாய்...இன்று சுழலும் துப்பாக்கியால் என் வாழ்க்கையையே சுட்டு சாம்பலாக்கி விட்டாய்...எந்தக் கைகள் என் இதயத்தின் கதவுகளைத் தட்டி, இன்பநாதம் எழுப்பியதோ, அதே கை இன்று என் வாழ்க்கையின கதவுகளை மூடிவிட்டது. எந்தக் கரங்கள் என்னை அணைக்க விரும்பியதோ, அதே கரம் என் வாழ்வின் ஜீவ ஒளியை அணைத்துவிட்டது...

போதும் பார்வதி போதும்; இன்னும் என்னை சித்திரவதை செய்யாதே! அன்று என் வாலிப போதையால் உன் வாழ்வைப் பாழாக்கினேன்: இன்று என அதிகார போதை உன் வாழ்வைப் பாழாக்கி விட்டது! என்னை மன்னித்து விடு பார்வதி; என்னை மன்னித்து விடு!

நானா மன்னிப்பது? இந்த நாடு உன்னை மன்னிக்கட்டும்!

பார்வதி! உன் செல்வனையும் உன்னையும் காப்பாற்றும் பொறுப்பு என்னுடையது; காலமெல்லாம் உனக்கு சேவை செய்கிறேன்.

சாவூரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் எனக்கு உன் உதவி எதற்கு?

பார்வதியின் மூச்சு திணறியது! டாக்டரை அழைத்து வருகிறேன் என்று ஓடினான் அசோகன்! அய்யோ! அம்மா! என்ற அலறல் அவருடைய வேகத்தைத் தணித்தது. குடிசைக்குள் ஓடினார்! பார்வதியின் செல்வன் அவள் உடலின் மேல் விழுந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான். அந்தச் சிறுவனின் அலறல் அவள் காதில் விழவில்லை; தேம்பும் செல்வனைத்தேற்ற அவள் வாய் திறக்கவில்லை! அவனுடைய கண்ணீரை அவள் கரங்கள் துடைக்கவில்லை.

அடுத்த நாள் சப் இன்ஸ்பெக்டர் தன் வேலையை ராஜினாமா செய்து விட்டாரென்ற செய்தி கேட்டு கம்மம்பட்டியே ஆச்சரியத்தில் மூழ்கியது!

★

கே. பி. காமாட்சி மறைவு

திரையுலகிலே தனக்கென ஓர் இடம்பெற்றிருந்தவரும்; மக்கள் நினைவை விட்டு இன்றளவும் நீங்காத ஜீவனுள்ள திரைப் பாடல்கள் இயற்றியவரும்; சிறந்த நடிகருமான தோழர் கே. பி. காமாட்சியவர்கள் மார்ச் 21-ம் நாள் இயற்கையெய்தினார் என்ற செய்தி நம்மையெல்லாம் சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

கலைஉலக ஈடுபாடுகொண்டோரெல்லாம் மாலை அவர் சவ அடக்க ஊர்வலத்தில் பங்கேற்றுதங்கள், மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர். தேம்பிய கண்களோடு அவரை இழந்து நிற்கும் அவர்தம் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்ததுக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—(ஆ-ர்.)

●

தீச்சுடர்

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களை ஆசிரியராகக் கொண்ட தீச்சுடர் தமிழ்வார வெளியீடு மே திங்கள் மூன்றும் நாள் மே தின செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றோடு வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏஜண்டுத் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஆசிரியர்,
தீச்சுடர்
31, தையப்ப முதலி தெரு,
சென்னை-1.



எந்த முற்போக்கான கட்சியும், நாம் மேற்கொண்டுள்ள மூலாதாரக் கொள்கைக்கு ஊறு நேரிடாத வகையிலும், நமது கழகத் தன்மானத்திற்கு கேடு சூழாத வகையிலும், எந்தப் போராட்டம் துவக்கி, அதிலே கலந்து பேசி காரியமாற்ற அழைத்தாலும், நாம் தயாராக இருக்கிறோம் என்பதை அடிக்கடி அறிவித்திருக்கிறோம். இப்போதும் அறிவிக்கிறோம்.

பொன்மலை எஸ். ஆர். யு. கூட்டம் ஒத்திவைப்பு.

27—3—56, 31—3—56 தேதிகளில் பொன்மலையில் நடைபெறுவதாக இருந்த எஸ். ஆர். யு. கூட்டம் பல செளகரியக் குறைவான காரணமாக, 2—4—56 திங்கள் மாலை 5-30 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்று அனைவரும் வருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
ஜி. பராங்குசம்,
ஏ. சம்சுடீன்,
அமைப்பாளர்கள்.

★

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

மிட்டாய்க்காரன்

வாசலில் உட்கார்ந்திருந்தது வேணி. அதை ஒத்த சிறுமிகளும் சிறுவர்களும் தெருவில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தபோது அதுமட்டும் ஏன் இப்படி எதையோ பறி கொடுத்தவள் போல் உட்கார்ந்திருக்க வேண்டும்?

அடிக்கொரு முறை அது தெரு முனையை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தது. பாவம்; அது யாருடைய வரவையோதான் அத்தனை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது! சற்று நேரம் சென்றது.

"மிட்டாய், மிட்டாய்!" என்றகுரல் தெரு முனையில் கேட்டது. வேணி சடக்கென்று எழுந்தது. உற்று கவனித்தது.

ஒரு நொண்டி, ஒரு கையில் ஊன்று கோலுடனும், மறு கையில் மிட்டாய்கள் நிரம்பிய கண்ணாடி ஜாடி ஒன்றையும் ஏந்தி வேகமாக நடந்து வந்துகொண்டிருந்தான். காசை நீட்டி, 'மிட்டாய் கொடு' என்று அதிகாரத்துடன் கேட்ட குழந்தைகளைக் கூட அவன் அவ்வளவாக கவனிக்கவில்லை. வேக வேகமாக வந்து கொண்டிருந்தான்.

வேணி முகத்தில் சிரிப்பு தவழ அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

அவன் வந்துவிட்டான். "ஏ, மித்தாய் தாத்தா! ஏன் இன்னிக்கு இவ்வளவு நாழி?" என்று கேட்டது வேணி.

மிட்டாய்க்காரன் பல்லெல்லாம் தெரிய சிரித்தான். "ஏன் பாப்பா, நீ ரொம்ப நாழி காத்துக்கிட்டிருந்தியா?" என்றான்.

'ஆமாம்' என்ற பாவனையில் தலையை அசைத்தது வேணி.

மிட்டாய்க்காரன் கண்ணாடி ஜாடியைத் திறந்து மிட்டாயை எடுத்துக் கொண்டிருந்தான்.

"தாத்தா! தாத்தா! இன்னைக்கு எனக்கு மித்தாய் வேண்டாம்!"—என்றது வேணி அப்போது.

"ஏன் பாப்பா, ஏன்?"—தினம் தவருமல் மிட்டாய் வாங்கும் வேணிக்கு, இன்றைக்கு என்ன வந்துவிட்டது என்ற சந்தேகம் அவனுக்கு!

வேணியின் முகம் 'சடக்'கென்று மாறியது. "இங்க பாரு தாத்தா!" என்று தன் கையை விரித்துக் காட்டியது. வியர்வை படிந்திருந்த அந்தப் பிஞ்சுக் கைகளில் எதுவுமில்லை. அதாவது அதில் தினம் த[illegible]ருது மாலை வேளையில் இடம்பெறும் 'காலணு' அப்போது இல்லை. "பாத்தியா, எங்கிட்ட காசு இல்லை. அம்மாவைக் கேட்டேன்; அப்பாவைக் கேட்டேன்; யாருமே தரலே! அதனுல வேண்டாம்" என்றது வேணி. பாவம், அதன் குரல் தழதழத்து விட்டது.

மிட்டாய்க்காரன் சிரித்துவிட்டான். எடுத்த மிட்டாயை மீண்டும் ஜாடியில் வைத்துவிடவில்லை. வேணியின் கையில் கொடுத்தான். "காசு இல்லாட்டா பரவாயில்லை; சாப்பிடு" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான்.

அவன் போகுமட்டும் பார்த்துக் கொண்டிருந்த வேணி, மிட்டாயை வாயில் போட்டுக் கொண்டு ஓடியது.

★

ஒரு நாள்; இரண்டு நாளல்ல; அந்தமிட்டாய்க்கார நொண்டி அந்தத் தெருவிற்குள் அடியெடுத்துவைத்த நாள் முதல், வேணி ஒருநாள்கூட மிட்டாய் வாங்கத் தவறியதேஇல்லை. அந்த மழலைச் செல்வத்தின் 'உளறல் மொழி'யை ரசித்துக் கொண்டே மிட்டாய் கொடுக்க அந்த நொண்டியும் தவறியது கிடையாது.

"ஏன் தாத்தா, எங்க ஊட்டுல வண்டியிருக்கே, ஜல் ஜல்லுன்னு போகுமே—ஏன் ஒனக்கு இல்லே?" என்று கேட்கும் வேணி.

கிழவன் சிரிப்பான். "அதுவா கண்ணு, எனக் கிட்டேயும் வண்டியிருந்தா நான் ஊருக்கு மிட்டாய் தர முடியுமா? நானும் வண்டியிலே யேல்ல-போயிக்கிட்டிருப்பேன்!"— என்பான்.

"ஆமா, ஆமா தாத்தா! ஒனக்கு வண்டியே வேந்தாம்!" என்று தலையை ஆட்டிக் கொண்டே சொல்லும் வேணி.

நொண்டி, "எனக்கு மாடும், வண்டியும் இருந்தால் நான் ஏன் இப்படி மாடாய் உழைக்க வேண்டும்; ஓடாய்த் தேய வேண்டும்" என்று முணுமுணுத்துக் கொண்டே செல்வான்.

மற்ருெரு நாள்...

"ஏன் தாத்தா, நீ சாமி பாத்திருக்கியா?" என்று கேட்கும் வேணி.

"எந்த சாமி?" என்பான் கிழவன்.

"அதான் பெரிய கோயில்லே இருக்குமே, எங்கப்பா கூட பூஜை எல்லாம் செய்வாரே, நான் பாத்திருக்கேன். அது ரொம்ப ரொம்ப நல்ல சாமி. தினந்தினம் ராத்திரியிலே எங்கப்பாவுக்கு எத்தனை தேங்காய், பழமெல்லாம் தருது தெரியுமா?" என்று சொல்லும் வேணி. அதனுடைய அப்பா ஒரு கோயில் குருக்கள். பாவம், அவர் யாருமறியாமல் செய்யும் செயல்களை எல்லாம், வேணியின் சூதறியா நெஞ்சு இப்படி பறைசாற்றும்!

அதைக் கேட்கும் கிழவன், "சாமியா?...அதைத் தொட எங்களுக்கு ஏதும்மா உரிமை?" என்பான். நொண்டிக் கொண்டே சென்று மறைவான்.

இப்படி தினம் தினம் ஏதாவது பேசி வேணி கிழவனை சிரிக்க வைப்பாள்.

★

இந்நிலையில் ஒரு நாள்...

கிழவனைக் காணேம். மாலை மங்கி, இருள் பரவும் நேரம் வரை வேணி உட்கார்ந்து பார்த்தது. கிழவன் வரவேயில்லை. தன் பிஞ்சுக் கையுக்குள் புதைந்து கிடந்த காலணுவை ஆயிரம் தடவை திரும்பத் திரும்பப் பார்த்துவிட்டது. ஆனுலும் அவனைக் காணவே காணேம். வேணிக்கு அழுகை அழுகையாக வந்தது. இரவும் வந்து விட்டது. ஆனுல் இரவில், 'மிட்டாய், மிட்டாய்' என்று கிழவனின் குரல் எங்கேயோ ஒலிப்பதை கனவிலே கேட்டாள் வேணி.

★

மறு நாள் பொழுது விடிந்தது; பொழுது சாய்ந்தது. ஆனுல் கிழவனைக் காணேம். இப்படியே நான்கு நாட்கள்! வேணி என்ன செய்யும்? என்னவோ, ஏதோ என்ற பயம் அவள் உள்ளத்தில் குழப்பத்தைஉண்டுபண்ணிவிட்டது.

அன்று மாலை...

வழக்கம் போலவேதான் — கிழவனைக் காணேம்; வாசலில் நின்று நின்று அலுத்துப் போன வேணி மெதுவாக தெருவில் இறங்கியது. தானே கிழவனைத் தேடிப்போனுல் என்ன என்ற முடிவுடன் நடக்க ஆரம்பித்தது. முன்பு ஒரு முறை வேணியின் தொல்லை தாங்காமல், தன் வீடு ஊர்க்கோடியிலுள்ள குட்டைக்கு அருகிலே இருக்கிறதுஎன்று சொல்லியிருந்தான் கிழவன். அந்த நினைவு வந்து விட்டது வேணிக்கு. அப்புறமென்ன? வீட்டில் தேடுவார்களே என்ற எண்ணம் கூட தோன்ருமல் வேக வேகமாக நடக்க ஆரம்பித்து விட்டது.

இருள் படர ஆரம்பித்து விட்டது. குட்டைக்கரைக்கு வந்து விட்டது வேணி. பக்கத்தில் தென்பட்ட குடிசைகளில் தன் பார்வையை செலுத்தியது. சற்று நேரந்தான், மறுகணம், "ஏ, மித்தாய் தாத்தா!" என்று கத்தி விட்டது. குடிசை ஒன்றின் வாசலில் அந்த நொண்டி படுத்திருப்பதையும் பார்த்து விட்டது. மறுகணம் விறுவிறு என்று அவனிடம் ஓடியது.

தன் மேல் வந்து திடீரென்று விழுந்த வேணியைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டான் கிழவன்.

"ஐயோ, என்ன பாப்பா இது? நீ எங்கேம்மா இங்கே வந்தே?" என்ருன் படபடப்புடன்.

"போ தாத்தா! நீதான் எனக்கு மித்தாய் தரவேயில்லியே...அதான் நானே..."-வேணிக்கு அழுகையே வந்து விட்டது.

"அழாதே பாப்பா! எனக்கு நாலு நாளா உடம்பு சரியில்லே! நாளையிலேயிருந்து கண்டிப்பா வருவேன்! இந்தாம்மா மிட்டாய்!" என்ருன் கிழவன். பழைய தயாரிப்பில் மீதியிருந்த ஒரு மிட்டாயை எடுத்து வேணியிடம் நீட்டினுன்.

வேணி வாங்கிக் கொண்டது. தன் கையில் புதைந்து கிடந்த காலணுவை நீட்டியது. கிழவன், "வேண்டாம்மா" என்ருன். வேணி 'சடக்'கென்று அதை அவனது பொக்கை வாயிக்குள் போட்டு விட்டது. கைகொட்டிச் சிரித்தது. கிழவனும் காசை எடுத்து விட்டுச்சிரித்தான்.

நேரம் சென்று கொண்டே இருந்தது. அதை உணர்ந்த கிழவன், "பாப்பா! நீ வீட்டுக்குப் போம்மா! முன்னிருட்டுக் காலம். இருட்டு வந்துட்டா அப்புறம் பயமாயிருக்கும்!" என்ருன்.

வேணி புறப்பட்டது. அதே சமயம் "வேணி, வேணி!" என்று கத்திக் கொண்டே குட்டைக் கரைக்கு வந்துவிட்ட வேணியின் அப்பா, அவளைப் பார்த்து விட்டார். வேணியைத் தேடி துடித்துக் கொண்டு வந்த அவரது முகத்திலே, அவள் கிடைத்து விட்டாள் என்ற மகிழ்ச்சி தானே தோன்ற வேண்டும்? ஆனுல், ஏனே கோபமும், வெறுப்பும் போட்டி போட்டுக் கொண்டு அவரது முகத்திலே ஆட்சி செலுத்தின.

வேணி, தன் அப்பாவுடன் வீட்டுக்குப் போய்விட்டது.

★

மறுநாள் மாலை...

"மிட்டாய், மிட்டாய்!" என்ற குரலுடன் தெருவில் நுழைந்தான் கிழவன், வேக வேகமாக!

ஆனுல் வீட்டு வாசலில் வேணியைக் காணேம். கிழவன் வீட்டை நெருங்கினுன்; வாசலுக்கும் வந்து விட்டான். வேணி வரவேயில்லை. என்ன நேர்ந்தது? கிழவன், "மிட்டாய், மிட்டாய்!" என்று கத்தினுன்.

வேணி வந்தது. கிழவனுக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனுல், வந்த வேணி வாசல் கதவை 'சடா'ரென்று சாத்தி விட்டது. கிழவனுக்கு எதுவுமே புரியவில்லை.

"பாப்பா, பாப்பா! உனக்கு மிட்டாய் வேண்டாமா?" என்ருன்.

"வேந்தாம் போடா!"—வேணி தான் உள்ளேயிருந்து கத்தியது! வேணியா இப்படிப் பேசுகிறது— கிழவன் துடித்தே போனுன்.

"ஏன் பாப்பா! உனக்காகப் புதிசா போட்டுக் கொண்டு வந்திருக்கேன். காசுகூட வேண்டாம்— சும்மாவே தரேன் பாப்பா!"— கிழவன் மீண்டும் கத்தினுன். மூடிய கதவு திறக்கப்படவில்லை!

"போடா, போ! எனக்கு வேந்தாம் உன் மிட்டாய்! அதிலே விஷம் இருக்கும்! உன் மித்தாயை சாப்பிடக் கூடாது; சாப்பிட்டா செத்துப் போயிடுவேன்! எங்கப்பா சொன்னுரே! ஏன்னு நீ பறையனும்! போடா, ஓடிப்போ!" என்று வேணியின் குரல் எழும்பியது. அதைத் தொடர்ந்து வீட்டுக்குள்ளே ஓடும் காலடி ஓசையும் கேட்டது.

கிழவன் திடுக்கிட்டு விட்டான். "நீ பறையனும்...உன் மித்தாயிலே விஷம் இருக்கும்!"—அவன் காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்தது. கத்தினுன், "வேணி, வேணி!" என்று. பலனேயில்லை.

"ஏதுமறியா நெஞ்சிலே விஷம் தூவப்பட்டு விட்டது!" என்று முணுமுணுத்தான். நடந்தான். அதன் பிறகு அந்தத் தெருப்பக்கம் "மிட்டாய், மிட்டாய்!" என்ற அவனது குரல் கேட்கவேயில்லை!

—சொர்ணம்

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்.
(●) ப. இசையமுது; உஸ்மான் தெரு. சென்னை-17.

ப. துரைக் கண்ணன்; கும்மம்பட்டி.

(?) காமராசரும் ஆச்சாரியாரும் நண்பர்களா?

ஆமாம்; பதவிப் பிரச்சனை குறுக் கிடாத நேரங்களில்!

சி. சிதம்பரம்; செந்திட்டை.

(?) இட்லர் ஒரு அரசியல் மேதையா?

இல்லை; இந்த நாட்டுக் கைராட் டையைவிட அவனது 'ஸ்வஸ் திக' சின்னம் அதிகமான சவக் குழிகளைத் தோண்டி யிருக்கிறது!

எம். ஜி. நாதன்; ராக்...ட்.

(?) என்னைப்போன்ற அமெச்சூர் நடிகன் தன் திறமையைக் காட்ட எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்?

நாட்டில் வெள்ளம் வரும்போது நீர் முதலமைச்சரா யிருந்தால் கிடைக்கும்!

கு. அருணாசலம்; ஈரோடு.

(?) இப்போது எல்லா மந்திரி களும் பொதுக் கூட்டங்களில் 'பிதற்றுகின்றனராமே'—ஏன்?

வேறொன்றுமில்லை; தேர்தல்வரும் முன்னே மணியோசை வரு கிறது!

இரா. கேசவன்;

(?) நாடகம் என்பதன் பொருள் என்ன?

நாடு—அகம்; நாட்டின் அகத்தைக் காட்டுவது—என்றும் பொருள் கொள்ளலாம்!

க. வெற்றிவேந்தன்; கோவை.

(?) நேருவுக்கும், கிருஷ்ண மேனனுக்கும் ஓட்டப்பந்தயம் வைத்தால்......?

பொதுமக்களுக்குப் பதில் சொல் லாமல் அவர்கள் இருவராலுமே ஓட முடியாது!

இரா. இளந்தென்றல்; சென்னை 21

(?) பெரியார் காங்கிரசில் சேர்ந்து விட்டால்?

அப்போதுகூட குத்தூசியார் மந்திரி யாக முடியாது!

(?) கனம் சுப்ரமணியத்துக்கும், ஆச்சாரியாருக்கும் உள்ள தொடர்பு எப்படியிருக்கிறது?

ஆச்சாரியார் ஒரு 'ஸ்விட்ச்'; அதைத் தட்டியதும் சுற்றும் மின்விசிறி சுப்ரமணியம்!

மா. அரங்கசாமி; கோவை.

(?) எழுத்தறிவித்தவன் யார்?

இறை—வறுமைக்கு; கலைக்கு!

துரை முருகேசன்; காரமடை.

(?) அரசியல் நாகரிகம் என்பது என்ன?

தாய்க் கழகம் பத்து பாத்திரங் களில் நம்மீது கொட்டும் தண் ணீரை 'ஷவர்பாத்'தாக நினைத் துக்கொண்டு குனியாமல் நிற் பதுதான்!

ஆர். கோபாலகிருஷ்ணன்; மேலூர்.

(?) சம்சாரம் சாகரமா?

ஆமாம்: நீந்தத் தெரியாதவர் களுக்கு!

கே. ஆர். சங்கர்; நெல்லை.

(?) உண்மை எப்படி இருக்கும்?

சில சமயங்களில் அது ஊமை யாகவும் இருக்கும்!

லிங்கேசன்; ஆர். எஸ். புரம்.

(?) தற்கொலை செய்து கொள்ள துணிச்சல் தேவையா?

நிச்சயமாக; இல்லாவிட்டால் துணிந்து காமராசர் 'சென்னை' 'தமிழ் நாடு' ஆவதைத் தடுத் திருப்பாரா?

(?) வாழ்வு மாயை என்பது உண்மையா?

கவர்னர் ஜெனரல்கள்; மந்திரிகள் —இவர்களைப் பொறுத்தவரை அது உண்மையாகத்தான் இருந்திருக்கிறது!

கே. எஸ். முகுந்தன்; ஆத்தூர்.

(?) காமராசர் எப்போது அழு வார்?

அவர் கையாளும் சாகசச் செயல் கள் 'சிரிப்பாய்ச் சிரிக்கும்' போது!

எஸ். பி. விநாயகம், தூத்துக்குடி

(?) காமராசர் எந்த விஷயத்தைப் பற்றியும் துணிந்து ஒரு முடி வுக்கு வருவதில்லை; ஊமை போல் நிற்கிறார் என்று நான் குற்றம் காட்டினேன்; நண்பர் ஒருவர் 'நிறைகுடம் நீர் தளும் பாது' என்கிறாரே?

நிறைகுடம் குடமோ? 'நீரே இல் லாத குடமும்' தளும்பாது என்று அவருக்கு சொல்லி வையுங்கள் தோழரே!

கே. ஞானகுருநாசன்; ஜெகண்டபுரம்.

(?) சந்தர்ப்பம் என்பது என்ன?

புத்திசாலிகள் ஊஹும் மகுடியின் முன்னே மயங்கி நிற்கும் சர்ப்பம்!

(●) ப. இசையமுது, சென்னை-17

(?) இரவில் தாமரை தூங்குவ தேன்?

நிலவோடு அல்லி கூடி மகிழ்வ தற்கு நாம் ஏன் இடையூராக இருக்க வேண்டும் என்ற 'பெருந்தன்மை' காரணமாக இருககலாம்!

கொள்கை வளருது கோபுரம் போலே

கருணாநிதியின் ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்

ஏப்ரல்	1	அரக்கோணம்
,,	7	தஞ்சை
,,	8	எண்கண்
,,	12	ஆம்பூர்
,,	15	தூத்துக்குடி (நகாசபை வரவேற்பு)
,,	22	மதுரை
,,	29	திருவெண்காடு

தொணவட்டம் (வேலூர்)

1—4—56 ஞாயிறு மாலை மணிக்கு தோழர் எம். பி. சார... அவர்கள் தலைமையில் தோழர் கள் சி. பி. சிற்றரசு; ஆ. கரு... கோவியன், குமரர். சாமி ஆ... யோர் பேசுவர்.

★

திருமண விழா

கள்ளிக்குடி 'முரசொலி' விற்ப யாளர் தோழர் ச. கு. தங்க மு... யாண்டி அவர்கள், தோழியா... ரெத்தினம அவர்களை வாழ்க்கை துணைவியாக ஏற்றுக் கொள் கிறார். திருமண விழா 2—4—... மாலை 9-மணிக்கு கள்ளிக்குடி ம... ககன் இல்லத்தில் நடை பெறும்.

★

மகிழ்கிறோம்.

திருவள்ளூர் "முரசொலி" விற்ப யாளர் தோழர் ஜதுருஸ் அ... களின் மனைவியார் சென்ற 22-2... அன்று ஒரு ஆண் மகவுக்... தாயானார் என்ற செய்தி கேட்... மகிழ்கிறோம்.

★

திருமானூர் (திருச்சி மாவட்ட... திமு... துணைச் செயலா... தோழர் ஆர் பாலசுந்தரம் அ... களின் துணைவியார் அருண்மொ... என பெண் மகவுக்குத் தாயா... என்ற செய்தி கேட்டு மகிழ்கிறோம்.

காதிர் பள்ளி கட்டிட நிதிக்கா...

...-4-56 சனிக்கிழமை

இரவு 9 மணிக்கு

...சை ராமநாதன் செட்டியார்

ஹாலில்

இலட்சிய நடிகர்

எஸ். எஸ் ராஜேந்திரன்

குழுவினர் நடிக்கும்

மணி மகுடம்

நடனம் :

குலேபகாவலி புகழ்

ஈ. வி. சரோஜா

கட்டணம் :

ரூ. 5, 3, 1-8-0 அணா 1...

பெண்கள் தரை அணா 8...

அமைப்பாளர்; கே. வி. ராம...

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம். 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6